சங்கநூற் செல்வர்

# பண்டிதமணி அருளம்பலவனூர்



# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கநூற் புலவர்

பண்டிதர் அருளம்பலவனர்

# நினைவு மலர்



257966

பராபவ ஆனி 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தா அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

சங்கநூற்செல்வர்

பண்டிதமணி சு. அருளம்பலவனார் அவர்கள்

மறைவு: 20-5-1966

தோற்றம்: 11-4-1910

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பண்டிதமணி சு. அருளம்பலவனார் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு.

## பிறப்பு:-

யாழ்ப்பாணத்திற்கு அணித்தாயுள்ளதும், கடலாற் சூழப்பட்டதுமான காரைநகர் என்னும் கவின்பெறு பதியில், சைவ வேளாண் மரபில் சிவனடி மறவாச் சிந்தையராகிய சுவாமிநாதன் என்பவருக்கும் அவரது பாரியார் சிதம்பரத்துக்கும் புத்திரனாக பண்டிதமணி அருளம்பலவனார் அவர்கள், 1910-ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 11-ம் நாள் பிறந்தார். அயல்வீட்டுக் குழந்தையொன்று போய் இவரைக் கண்டதும் 'அருளம்பலம்' என்று பெயர் வைக்குமாறு கூறவே, தந்தையாராகிய சுவாமிநாதனும் களங்கமற்ற அக் குழந்தையின் வாயில் வந்த அப் பெயரையே சூட்டி மகிழ்ந்தார்.

## இளமை:-

'விளையும் பயிரை முளையிற் தெரியும்' என்பதுபோல அருளம்பலவனார் இளமையில் மிகவும் சுறுசுறுப்பாகக் காணப்பட்டார். அயல்வீட்டுப் பிள்ளைகளோடு எந்நேரமும் விளையாட்டில் விருப்புடையராகவும், குறும்புத் தனத்தில் கூடியவராகவும் விளங்கினார். குழந்தை அருளம்பலவனாரின் சாதகக் குறிப்பைத் தந்தையார் பார்ப்பித்தபோது சோதிடர் அவரது அறிவாற்றலையும், புகழையும் பற்றிச் சிறப்பாகக் கூறினார். அறிவறிந்த மகனைப் பெற்ற தந்தையும் தாயும் மகிழ்ச்சியடைந்தார்கள். இறைவன் பொருள்சேர் புகழைப் பெற்றோர் தேவார திருவாசகங்கள் மூலம் பாடிப்பரவும்போது, குழந்தையாகிய அருளம்பலவனார் அருகில் இருந்து அன்போடு கேட்பது வழக்கமாகும். இதன் பயனாக குழந்தையுள்ளத்தில் சிவபக்தி நாளும் வளர்ந்தோங்கியது.

## கல்வி:-

அருளம்பலவனார் பள்ளிக்குச் செல்லும் பருவத்தையடைந்ததும், தந்தையார் மகனுக்கு முறைப்படி வித்தியாரம்பஞ் செய்வித்து, அயலிலுள்ள அமெரிக்க மிஷன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்கவிட்டார். அருளம்பலவனாரின் பதினோராம் வயதில் அவரது அருமைத் தந்தையார் சுவாமிநாதன் அவர்கள் காலமானார். 'தந்தையொடு கல்விபோம்'—என்ற நிலைமைக்கு இடமளிக்காமல் தாயாராகிய சிதம்பரம் அம்மையார் கணவனின் பிரிவுத் துன்பத்தைச் சகித்துப் பிள்ளையைப் படிக்க வைப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்தார். சைவசமயச் சூழலில் கல்வி கற்பிக்க எண்ணிய தாயார், அருளம்பலவனாரைச் சுப்பிரமணிய வித்தியாசாலையில் சேர்த்தார். ஆசிரியர்களான பேரம்பலம், விசுவலிங்கம், பஞ்சாட்சர ஐயர், விசுவலிங்கச் செட்டியார் என்போர் அருளம்பலவனாரின் விசேட ஆற்றலைக் கண்டு பெருமைப்பட்டார்கள். தாயார் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்தபோதும், 'சிவசிவ' என்று இறைவன் திருநாமங்களை உச்சரிப்பதில் தவறுவதேயில்லை. அருளம்பலவனாருக்கு உறுதுணையாக இருந்த தாயார் சிதம்பரம் அம்மையாரும் கணவனைப் பின்பற்றிக் காலமானார்.

அருளம்பலவனார் ஸ்ரீமத். சி. சுப்பிரமணிய தேசிகர்பால் முறையாகத் தமிழ் கற்றார். இவரது ஆராய்வுத் திறனையும், கல்வி நாட்டத்தையும் கண்ட தேசிகர் அவர்கள், மேன்மேலும் அருளம்பலவனாருக்குத் தமிழில் ஆர்வத்தையூட்டினார்.

'உற்றுழி உதவியும் உறு பொருள்
கொடுத்தும் பிற்றைநிலை முனியாது
கற்றல் நன்றே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாண்டியன் அறிவுடை நம்பியின் கருத்துக்கேற்ப அருளம்பலவனர் குரு விடத்தில் பயபக்தியோடும், பணிவோடும் பாடங்கேட்டார். தமது பரந்த புலமைக்கும் ஆழ்ந்த அறிவிற்கும் தேசிகர் அவர்களே காரணமாவர் என்று பிற்காலத்தில் பண்டிதமணி அவர்கள் பலமுறை சொல்லியதோடு, அன்னுரை அன்று போல என்றும் போற்றி வணங்குமியல்புடையராகவும் விளங்கினர்.

## ஆசிரியப் பயிற்சி:-

அருளம்பலவனர் தமது பதினெட்டாம் வயதில் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து இரண்டாண்டுகள் பயிற்சி பெற்றார். பயிற்சி பெறும்போது இலக்கியம், கணிதம், ஓவியம், கைப்பணிப் பாடங்களில் மிகவும் திறமையுள்ளவராகக் காணப்பட்டார். அருளம்பலவனருக்கு கலாசாலையில் தமிழ் ஆர்வத்தை வே. மகாலிங்க சிவத்தம்பி அவர்கள் ஊட்டினர்கள். அதன் பயனகப் பண்டிதமணி அவர்கள் 1929-ம் ஆண்டில் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தும் பிரவேச பண்டிதர் பரீட்சையிலும், அடுத்த ஆண்டில் பாலபண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

## ஆசிரிய சேவை:-

பயிற்சிபெற்று வெளியேறிய அருளம்பலவனர் முதன்முதலாகக் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் ஏழு ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றினர். மாணவர்களுக்கு அறிவூட்டியதோடு உடன் பயிற்றும் தம் குருவாகிய ஸ்ரீமத். சி. சுப்பிரமணிய தேசிகரிடம் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து கொள்வார். ஓவியக் கலையில் சிறந்து விளங்கிய அருளம்பலவனர் 1931-ல் அதற்குரிய பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

## இல்லறம்:-

காரைநகரில் நீலிப்பந்தனை என்னும் இடத்தைச் சேர்ந்த க. நல்லதம்பி என்பவருக்கும் அவரது பாரியார் சிவகாமிப் பிள்ளைக்கும் இரண்டாவது புத்திரியாகப் பிறந்தவரும் ஆசிரியராகக் கடமையாற்றியவருமாகிய விஜயசவுந்தர அம்மாவை 1935-ம் ஆண்டில் அருளம்பலவனர் அவர்கள் வாழ்க்கைத் துணைவியாக ஏற்று இல்லறத்தை இனிது நடத்தினர். 1936-ம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்து ஈழத்தின் புகழை நிலைநாட்டினர்.

## ஆராய்ச்சி:-

மறைமலை அடிகளாரின் அறிவாற்றலை நன்குணர்ந்த அருளம்பலவனர் அவர்கள், அவரது முல்லைப்பாட்டாராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை என்பவற்றை முன்மாதிரியாகவும் பெரும் பொருளாகவும் கொண்டு பழந்தமிழ்ச் சங்க நூல்களை ஆராயத் தொடங்கினர். அதன் பயனக திருமுருகாற்றுப்படையாராய்ச்சியுரை எழுதி வெளியிட்டார். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர்களான பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களும், திரு. சோமசுந்தர பாரதியார் அவர்களும், திரு. ஐம்புலிங்கம்பிள்ளை அவர்களும் அருளம்பலவனருக்கு நன்கு அறிமுகமானர்கள். 1937-ம் ஆண்டில் பண்டிதமணியின் பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியுரையும் வெளிவந்தது. 1938-ல் அருளம்பலவனரும் அவரது பாரியாரும் புத்தளம் நுரைச்சோலையில் உள்ள அரசாங்க பாடசாலையில் ஆசிரியர்களாகப் பதவி ஏற்றனர். தலைமையாசிரியராகப் பணியேற்ற அருளம்பலவனர் நான்கு ஆண்டுகள் சேவை செய்தபின் கொட்டாஞ்சேனை அரசாங்க பாடசாலைக்கு மாற்றப்பட்டார்.

சில மாதங்களில் உலக மகா யுத்த நெருக்கடி காரணமாகப் பண்டிதமணியும் பாரியாரும் காலி உயர்தர அரசாங்க கலாசாலைக்கு மாற்றம் பெற்றனர். 12 ஆண்டுகள் அங்கு கடமையாற்றினர்கள். இக்காலத்திலேயே மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அச்சிடுவித்த பதிற்றுப்பத்துக்கு ஓர் ஆராய்ச்சியுரை எழுத முற்பட்டார். இவ்வுரையை எழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துங்கால் ஊக்கமளித்தவர்கள் ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்களும், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுமாவர். அச்சிடுமுன் செவ்வனே பார்வையிட்டு உதவியவர் அருளம்பலவனாரின் நெருங்கிய நண்பரான தும்பளை வித்துவான் க. கிருஷ்ணபிள்ளையவர்களாகும். ஆசிரியத் தொழிலில் ஈடுபட்ட நேரம் தவிர எஞ்சிய காலத்தில் ஆராய்ச்சியுரை எழுதுவதில் ஈடுபட்டும், பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையைப் பூர்த்திசெய்யப் பண்டித மணிக்குப் பதினான்கு ஆண்டுகள் கழிந்தன. அருளம்பலவனாரும் பாரியாரும் காலியில் இருந்து மாற்றம் பெற்று களுத்துறை அரசாங்க பாடசாலையில் ஐந்தாண்டுகள் கடமை புரிந்தனர். இனக்கலவரத்தில் இருவரும் மயிரிழையில் உயிர் தப்பினர். 1959-ல் அருளம்பலவனாரும் பாரியாரும் யாழ்ப்பாணத்திற்கு மாற்றம் பெற்றனர். ஆராய்ச்சியுரையில், 2-ம் 3-ம் 4-ம் 5-ம் பத்துக்களைத் தொகுத்து முதற் பாகமாக அருளம்பலவனார் 1960-ம் ஆண்டு ஆனந்தா அச்சகத்தில் பதிப்பித்து வெளியிட்டார்.

## பேரறிஞர்களின் தொடர்பு:-

1960ல்-ல் தமிழ் நாட்டுப் பேரறிஞர்களைச் சந்தித்து உரையாடவும், தலங்களைத் தரிசிக்கவும், விரும்பிய அருளம்பலவனார் தமது நான்காவது மகனுடன் தென்னிந்திய யாத்திரையைத் தொடங்கினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர், பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களையும் தமிழ்விரிவுரையாளர் வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை அவர்களையும், மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்களையும், வித்துவான் க. வெள்ளைவாரணனார் அவர்களையும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர், டாக்டர், மு. வரதராசனார் அவர்களையும், துணைப் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்களையும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர், மா. இராசமாணிக்கனார் அவர்களையும், தமிழ்ப் பேராசிரியர் — சொல்லின் செல்வர் — R. P. சேதுப்பிள்ளை அவர்களையும் சந்தித்து உரையாடியதுடன், அன்னாரின் நன்மதிப்பையும் பெற்று, விருந்தினராகவும் விளங்கினார். சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை அவர்கள் பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையைப் பெரிதும் பாராட்டியதுடன், சென்னைப் பல்கலைக் கழகப் பாடநூலாக்குவதாகவும் உறுதியளித்தார். ஆனால் அதை நிறைவேற்றுவதற்கு முன்பாகவே சேதுப்பிள்ளையவர்கள் காலமானார்கள்.

## பாராட்டு விழா:-

1961-ம் ஆண்டு ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலத்தினர், அருளம்பலவனாரின் பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையைக் கௌரவித்து ரூபா ஆயிரம் பரிசளித்தார்கள். காரைநகர் மக்களும், ஏனைய தமிழறிஞர்களும் சேர்ந்து இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி, க. கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமையில் காரைநகர் இந்துக் கல்லூரி, நடராசா ஞாபக மண்டபத்தில் 8-10-61-ல் ஓர் பாராட்டு விழாவைச் சிறப்பாக நடத்தினர்கள், அருளம்பலவனாரை அவரது இல்லத்திலிருந்து மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். விழாவில் பல பேரறிஞர்கள் கலந்து கொண்டு பாராட்டுரைகள் வழங்கினர் ஈழநாடு பத்திராதிபர் கே. பி. ஹரன் அவர்கள் அருளம்பலவனாருக்குப் பொன்னாடை போர்த்தியதுடன் பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை பொற்கிழியும் வழங்கிக் கௌரவித்தனர். அன்றைய விழாவில் அருளம்பலவனாருக்குச் 'சங்கநூற் செல்வர்' என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

## சத்திர கிசிச்சை:-

1962-ம் ஆண்டு அருளம்பலவனார் நோய்வாய்ப்பட்டார். குடலில் ஏற்பட்ட நோய்காரணமாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார். டாக்டர். மயில்வாகனம் அவர்கள் அருளம்பலவனாரைப் பரிசோதித்துச் சத்திரசிகிச்சை செய்ததன் பயனாக அருளம்பலவனார் சுகமடைந்து மீண்டும் தொடர்ந்து பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையை அச்சிடுவதில் முனைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-ம் பாகம் வெளியீடு:-

இலங்கை சாகித்திய மண்டலம் பரிசிலாக வழங்கிய ரூபா ஆயிரமும், காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் பொற்கிழியாக வழங்கிய ரூபா முந்நூறும், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் வழங்கிய ரூபா இருநூறும் அருளம்பலவனருக்குப் பதிற்றுப்பத்து 2-ம் பாகத்தை அச்சிடுவதற்கு ஓரளவு உதவியது. அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும் பதிற்றுப் பத்து ஆராய்ச்சியுரை முதற்பாகத்தைப் பாடப் புத்தகமாக அங்கீகரித்தமை அருளம்பலவனரின் ஆர்வத்தை மேலும் தூண்டியது.

## பண்டிதமணி:-

யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்க ஆதரவில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் பதிற்றுப் பத்து ஆராய்ச்சியுரை 2-ம்பாக வெளியீட்டுவிழா சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்றது. தலைமையுரையில் ஆறுமுக நாவலர் அடிச்சுவட்டைப் பின்பற்றி அருளம்பலவனர் செய்துள்ள ஆராய்ச்சி மிக நுணுக்கமாக அமைந்துள்ளதென்றும், யாழ்ப்பாணம் கண்டறியாத ஒரு மகத்தான சாதனையென்றும், திரு. வைத்தியநாதன் அவர்கள் குறிப்பிட்டு 'பண்டிதமணி' என்னும் பட்டத்தை அளித்தார்கள்; வடபகுதி உதவி வித்தியாதிபதியான திரு. சி. உ. சோமசேகரம் அவர்கள், பதிற்றுப்பத்துக்குக் காரணமாக விளங்கிய சேரமன்னரின் இலைச்சினையாகிய 'வில்' பொறிக்கப்பட்ட தங்கப் பதக்கத்தை அருளம்பலவனருக்குச் சூட்டிக் கௌரவித்தார்கள். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், பண்டிதமணி, அருளம்பலவனரைப் பற்றிப் பாராட்டிப்பேசினர்கள்.

## தலயாத்திரை:-

பண்டிதமணி அருளம்பலவனர் திருவாசக ஆராய்ச்சியினை எழுதமுற்பட்டார். அதன் பயனக திருவாசகத்தில் வரும் தலங்களை நேரில் தரிசிக்கவும், படங்களைச் சேர்க்கவும் விரும்பிய பண்டிதமணியவர்கள் தமது பாரியாரையும் இரு மக்களையும் அழைத்துக்கொண்டு 1964-ம் ஆண்டு மார்கழியில் இந்தியாவுக்குப் புறப்பட்டுப் பல தலங்களையும் தரிசித்தார். எதிர்பாராதவகையில் கோரப்புயற் காற்றினுல் பாம்பன் பாலம் தகர்க்கப்பட்டு விட்டது. இதனுல் பண்டிதமணியும் குடும்பத்தினரும் நீண்ட நாட்களுக்குத் தமிழகத்தில் தங்கவேண்டியதாயிற்று. காஞ்சிபுர ஞானப்பிரகாச சுவாமிகள், ஆதீனமகாசந்நிதானப் புலவர் சு. கு. அருணசலம், அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் வித்துவான் அருணசலம்பிள்ளை, தண்டபாணி தேசிகர், வெள்ளைவாரணனர், திருப்பனந்தாள் கல்லூரி அதிபர் வெங்கடராமையர் ஆகிய பேரறிஞர்களோடு தொடர்பு கொண்டு, விருந்தினராகவும் திகழ்ந்து தமது சந்தேகங்களைத் தெளிந்து கொண்டார். காஞ்சிபுரம் ஞானப்பிரகாச சுவாமிகள், பண்டிதமணியின் திருவாசக ஆராய்ச்சியின் ஆழ்ந்த புலமையைக் கண்டு அவரை 'மாணிக்கவாசகர்' என்றே அழைத்துப் பாராட்டினர்கள். 1965-ம் ஆண்டு தை 20-ம் நாள் பண்டிதமணியும் குடும்பத்தினரும் விமான மூலம் தாயகம் திரும்பினர்.

## திருவாசக ஆராய்ச்சி--

திருவாசக ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்ட பண்டிதமணியவர்கள், அல்லும் பகலும் உரையெழுதுவதில் முனைந்தார்; அதனுல் அவரது உடல் நலம் குன்றியது; ஆயினும் உரையை திருச்சதகம் வரை பூர்த்தி செய்த பண்டிதமணியவர்கள் சண்முகநாதன் அச்சகத்தில் கொடுத்து அச்சிடுவித்தார். அச்சுத் திருத்தங்களை நோய் வாய்ப்பட்டும் அயராது செய்து வந்தார். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு படுக்கையில் இருந்தபோது தம்மைப் பார்க்கச் செல்லும் அறிஞர்களிடம் திருவாசக ஆராய்ச்சியுரை பற்றிய சந்தேகங்களையே வினவிக்கொண்டிருப்பார். பண்டிதமணியின் நிலை கவலைக்கிடமானது;

## மறைவு:-

1966-ம் ஆண்டு வைகாசித் திங்கள் 7-ம் நாள் (20-5-66) வெள்ளிக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலையில் பண்டிதமணி அருளம்பலவனார் அவர்கள், மனைவி மக்களும், உற்றார் உறவினரும் தமிழன்னையும் அலறித் துடிக்க இறைவன் திருவடி நீழலையடைந்தார்கள்.

எச்சம்:-

பண்டிதமணியவர்களின் பூதவுடல் அழிந்தாலும் அன்னாரது புகழுடம்பு, தமிழ் மொழியுள்ளவரையும் நின்று நிலை பெறும், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பரிமேலழகர் போன்று அருளம்பலவனாரும் தமது ஆராய்ச்சியுரையால் அழியாப் புகழைத் தேடிக்கொண்டார். அவர் எழுதிய திருமுருகாற்றுப் படை ஆராய்ச்சியுரை, பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியுரை, பதிற்றுப் பத்து ஆராய்ச்சியுரை, திருவாசக ஆராய்ச்சியுரை முதலான நூல்களும், காலத்துக்குக் காலம் பத்திரிகைகளுக்கு எழுதியுதவிய கட்டுரைகளும், வானொலிப் பேச்சுகளும், என்றும் அழியாச் சின்னங்களாக விளங்கி, அவரை என்றும் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும் என்பதற் கையமில்லை.

'தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்' — என்ற வள்ளுவர் வாக்கிற்கு உரை வகுத்த பரிமேலழகர், எச்சம் என்பதற்கு, 'பிள்ளைகள்' என்று பொருள் குறித்துள்ளார். பண்டிதமணி அருளம்பலவனாரும் அறிவறிந்த நன்மக்களாக அறுவரைப் பெற்றெடுத்த பெருந்தகையாக விளங்கிப் பரிமேலழகர் உரையை நிறைவுபடுத்தி யுள்ளார் என்றால் மிகையாகாது.

'வையத்துள் வாழ்வாங்குவாழ்பவன்வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'
— என்ற தமிழ்மறைக்கு இலக்கியமாக விளங்கிய பண்டிதமணி அருளம்பலவனார் அவர்கள் இறைவனோடு இரண்டறக் கலந்தமை குறித்து ஆறுதலுறுவோமாக.

வாழ்க தமிழ்! வளர்க பண்டிதமணி அருளம்பலவனார் புகழ்!!

---

**டாக்டர் மு. வரதராசன்**
தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பர் கல்லூரி.

''பதிற்றுப்பத்து முதலியவற்றிற்கு ஆராய்ச்சியுரை இயற்றியவரும், சங்கநூல்களில் பயிற்சி மிக்கவரும், பண்பாடு மிக்கவரும் ஆகிய பண்டிதமணி அருளம்பலவனாரின் ஆன்மா அமைதியுறுக. இறைவன் திருவருள் நிழல் நல்குக.

**வித்துவான் க. வெள்ளைவாரணன்**
துணைப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

என்கெழுதகை நண்பராகிய பண்டிதமணி சு. அருளம்பலனார் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்த துயரச் செய்தி கேட்டுத் துணுக்குற்றேன். ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், உரைத்திறனும் வாய்ந்த அவர்கள், யாவரோடும் இனிமையாகப் பழகும் நல்லியல்பு வாய்ந்தவர்கள்; அடக்கமும் அமைதியும் உடையவர்கள்; நண்புக்கு இனியவர்கள். அவர்களது பிரிவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவர்களது பிரிவால் வருந்தும் குடும்பத்தார்க்கு எங்களது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புகழால் நிலைத்து விட்டாய்!"

வித்துவான் சொ: சிங்காரவேலன் M. A. Dip Ling.
மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

பழுத்த புலமை வாய்த்தோனே!
 பைந்தமிழில் எமைத் தோய்த்தோனே!
விழுத்த வத்தின் மேலோரும்
 விழையும் நுண்புல நூலோனே!
இழுத்தே நெஞ்சைப் பிணைப்போனே!
 இதயத் தொடுதமிழ் அணைப்போனே!
வழுத்தும் அருளம் பலவோனே!
 வானு டின்றே சென்றனையோ! (1)

நீயும் நானும் கண்டதிலை;
 நீள்தமிழ்ச் சுவையால் தொடர்வுற்றோம்;
தாயும் சேயும் கலங்கிடவே
 தனித்துத் துறக்கம் புக்கனையோ?
ஏயும் பதிற்றுப் பத்தினுக்கே,
 இனி, யார் உனைப்போல் ஆய்வுரையை
வேயும் திறமும் நலமுமிவண்
 வேறுச் செய்யும் வீறுடையார்? (2)

காரை நகரிற் பல்லாண்டு
 கற்றோர் செம்மல், நீவாழ்ந்து,
வேரைக் காத்துத் தமிழ்ப்பயிரை
 விண்ணுடளவும் நெடிதுயரச்
சீரைப் பாய்ச்சி வளர்த்தகதை
 செந்தமிழ் வரலா றுள்ளளவும்
பாரைத் தெளிவித் திடுமன்றோ?
 பாவல! இந்நாள் சென்றுயே. (3)

அழகிய தமிழிற் கடிதங்கள்
 அன்பே தவழத் தருவாயால்:
பழகிய நெஞ்சிற் தமிழ்மையினைப்
 பதித்தே இன்பஞ் சுரப்பாயால்;
குழக! நின் முதுமைக் கோலத்தும்
 குளிர்தமிழ் இளமை கொண்டாயால்;
இழந்தத னால்இன் றெமக்கெல்லாம்
 ஈறில் துயரமும் தந்தனையே. (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிரி யன்ன வளமுடையாய்!
கங்கையைப் போன்ற தெளிவுடையாய்!
பூவிரி சோலைத் தமிழ்நாட்டைப்
போன்றே யணைதற் கெளிமையினாய்!
மாவிரி மலர்போல் நெஞ்சுடையாய்!
மணக்கும் கவிதைத் திறனுடையாய்!
பாவிரி பைந்தமிழ்ப் பாவலனே!
படியிதிற் புகழால் நிலைத்துவிட்டாய்! (5)

சங்கத் தமிழின் உரைகளிலே
சலியா மல்நீ வாழ்கின்றாய்;
எங்கும் பழகியஅன்பர் மன
ஏக்கத் துடிப்பில் வாழ்கின்றாய்;
தங்கும் சீரிய மைந்தர் மனம்
தவழ்ந்தே பண்பால் வாழ்கின்றாய்;—
எங்கே உனை, யாம் பிரிந்துள்ளோம்?
என்றே அமைதி கொள்கின்றோம். (6)

பண்பின் நிலவே! தமிழ்ப்புனலே!
பாவியல் பொழியும் கருமுகிலே!
நண்பின் சிறந்த செங்கதிரே!
நாயகன் சிவனடி மறவாத
வண்மை தழையும் திருவாளா!
வாய்மை அருளம் பலப்புலவ!
உண்மை! எமது நெஞ்சிலெலாம்
ஒளியாய்ச் சுடராய் நிற்கின்றாய்! (7)

✶

தலைவரை யிழந்த குடும்பத்தின்
தணியாத் துயரம் தணிவிக்கும்
நிலைமையும் எமக்காம்:- "அன்புடையீர்!
நீணில மிதனுள் அவர்தந்த
கலையின் பனுவற் புகழுள்ளே
கலந்தே யவர்தாம் வாழ்கின்றார்!
அலைசேர் சடையான் திருவடிகள்
அன்புற வாழ்த்தி அமைவோமே!" (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரையாசிரியர்கள் வரிசையில்
# சங்கநூற் செல்வர், அருளம்பலவனர்

கலாநிதி சு. வித்தியானந்தன் M. A. Ph. D.
*விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை.*

சிறுகதை எழுதினுல், அதனைப் படிப்போர் பலர். பழைய இலக்கியம் ஒன்றற்கு ஆராய்ச்சியுரை எழுதினுல் அதனைப் படிப்போர் சிலரே. அத்தகைய நூல்கள் விலை போவதும் குறைவே. சிறு கதையில் ஆயிரம் பிரதிகள் பத்து மாதத்தில் அழியலாம். ஆனுல் ஆராய்ச்சியுரையில் ஆயிரம் பிரதி விலைபோகப் பத்து ஆண்டுக்கு மேற் செல்லும். எனவே இதனையெல்லாம் பொருட்படுத்தாது, திருமுருகாற்றுப்படை, பெரும்பாணுற்றுப்படை, பதிற்றுப் பத்து, முதலிய பழைய இலக்கியங்களுக்கு ஆராய்ச்சியுரை எழுதி வெளியிட்டுள்ளார் பண்டிதர் அருளம்பலவனர். இவற்றுட் பதிற்றுப்பத்துரை சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றுப் பலவிதத்தில் தலைசிறந்து விளங்குகின்றது. எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களிலே பதிற்றுப் பத்து ஒன்றனுக்கே இதுவரை முறையான உரை வெளிவரவில்லை. காரணம், இவ்விலக்கியங்களுள் மிகவும் கடினமானது பதிற்றுப்பத்தே. பழைய தமிழ்ச் சொல் வடிவங்களையும் வழக்குகளையும் கொண்டு விளங்கும் இந்நூலுக்கு உரையெழுத இந்தியாவில் எவருக்கும் துணிவு வரவில்லை. இவ்வாறு பிறர் இறங்குவதற்குப் பின்வாங்கிய ஒரு துறையில் ஈடுபட்டு, பல ஆண்டுகள் முயன்றதன் பயனுகப் பதவுரை, முடிபு, ஆராய்ச்சியுரை, பழையவுரை, ஒப்புமைப் பகுதி, மேற்கோள் என்று ஆறு பிரிவில் பதிற்றுப்பத்து உரையை வெளியிட்டுள்ளார். ஒரு நூலுக்கு, அதுவும் பழைய இலக்கிய நூலுக்கு ஆராய்ச்சியுரை எழுதுவதாயின் பழைய இலக்கிய நூற் பயிற்சியும், இலக்கண அறிவும் நிரம்பத் தேவைப்படும். ஆசிரியருக்குச் சங்க இலக்கியம், காவியங்கள், புராணங்கள் முதலிய இலக்கியங்களிலும் தொல்காப்பியம் நன்னூல் போன்ற இலக்கணங்களிலும் உள்ள பரந்த அறிவை பதிற்றுப் பத்து ஆராய்ச்சியுரை தெளிவாகக் காட்டுகின்றது.

ஈழநாடு உரையாசிரியர்களுக்குப் பேர் போனது. ஈழத்து உரையாசிரியர்கள் வெளியிட்ட உரைகள் இன்றும் கற்ருேரால் போற்றப்படுகின்றன. சிவஞான சித்தியாருக்கு உரையெழுதிய ஞானப்பிரகாச முனிவர் தொடங்கி, கூழங்கைத் தம்பிரான், ஆறுமுகநாவலர், ஆறுமுகத் தம்பிரான், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர், புலோலி குமாரசாமிப் புலவர், வல்வை வைத்தியலிங்கம் பிள்ளை, புலோலி முத்துக்குமாரசாமிக் குருக்கள், ஆசிரியர், வே. சிதம்பரப்பிள்ளை, புலோலி வைத்திய லிங்க தேசிகர், இணுவில் அம்பிகைபாகர், சுன்னுகத்துக் குமாரசாமிப் புலவர், சிவப் பிரகாச பண்டிதர், சிதம்பர ஐயர், காசிவாசி செந்திநாத ஐயர், புலோலி வித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை, ஏகாம்பரப் புலவர், திருவிளங்கம், சிவபாதசுந்தரம், நவநீத கிருட்டின பாரதி, கணேசையர் வரை பலர் பல இலக்கண இலக்கிய நூல்களுக்குச் சிறந்த உரை எழுதியிருக்கிருர்கள். இந்தியாவிலுள்ள பல அறிஞர் இவர்களிடம் வந்து கற்றுத் தாமும் உரைகள் எழுதியிருக்கிருர்கள். நாவலர் பதிப்பு, தாமோதரம்பிள்ளை பதிப்பு என்பனபோல ஈழத்துப் பெரியார்களின் உரை என்ருல் தமிழகத்தில் அவ்வுரைகளுக்குத் தனி மதிப்பு உண்டு. ஈழத்து அறிஞரைப் போலத் தமிழ் இலக்கணத்தை நன்ருகப் படித்தவர்கள் தமிழகத்திற் கிடையாது. இதனுலேயே ஈழத்துத் தமிழ்ச் சான்ருேர் சிறந்த உரைகளை எழுதும் ஆற்றல் பெற்றிருந்தனர். அந்த வழியிலே வந்த பண்டிதர் அருளம்பலவனரும் தென்னகத்திலுள்ள அறிஞர் பலரும் போற்றும் சிறந்த ஆராய்ச்சியுரைகளை வெளியிட்டு ஈழத்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழருக்கு அழியாப்புகழைத் தேடித் தந்திருக்கின்ருர்.

இன்று தென்னிந்தியாவிலே திருக்குறள், புறநானூறு, குறுந்தொகை போன்ற பழைய இலக்கியங்களுக்குத்தெளிவுரைகளும், விளக்கவுரைகளும், குறிப்புரைகளும் வெளிவருகின்றன. படிப்போர் உள்ளத்தில் மயக்கத்தை உண்டாக்கக்கூடிய இவ்வுரைகளில் எவ்வித தெளிவோ, விளக்கமோ, குறிப்போ, ஆராய்ச்சியோ கிடையாது. பண வருவாயைக் கருதிக் குறைந்த விலையில் அச்சிடப்படும் இவ்வுரைகளால் எவ்விதப் பயனுமில்லை; நூல்களின் மூலத்திலேயே எவ்வளவோ பிழைகள் ஏற்பட்டுச் செய்யுட்கள் உருமாறிச் சிதைந்து போகின்றன. இத்தகையதொரு சூழ்நிலையிற் பயன்படக் கூடிய ஆராய்ச்சி உரைகளை, என்றும் நிலைக்கக் கூடிய உரைகளை எமக்கு அளித்த பண்டிதர் அருளம்பலவனுரை எவ்வாறு பாராட்டுவதெனத் தெரியவில்லை. அவரால் எழுதப்பட்ட, ஆனுல் இதுவரை வெளிவராத பிற ஆராய்ச்சியுரைகளையும் அச்சிட்டு வெளியிடுவது நாம் அவருக்குச் செய்யக் கூடிய கைம்மாருகும்.

---

# மதினுட்பம் மறையாத மாமேதை

வித்துவான், பண்டிதர். க. கிருஷ்ணபிள்ளை,

செந்தமிழ் இலக்கியக் கடலின் மிக்க ஆழத்துள்ளன சங்க இலக்கியங்கள்; அச் சங்க இலக்கியங்களுள் நிறைந்து கிடப்பன பண்டைச் செந்தமிழ்ச் சான்ருேரின் கருத்துக்களாகிய ஒளிகாலும் விலையுயர்ந்த முத்துக்கள்.

நுனிப்புற் கறித்தாற் போன்று, செந்தமிழ் இலக்கியக் கடலின் மேற்பாகத்தே விரைந்து சென்று உல்லாச யாத்திரையாளர் இன்று பல்லோராவர்; அவர்க்கு அம்முத்துக்கள் புலப்படுவனவல்ல; மிக்க ஆழத்தே சென்று மூழ்கி, இலக்கணம், தருக்கம் ஆகிய கண்கொண்டு நோக்குவோர்க்கே அவை புலப்படுந் தகையன. அத்தன்மையாளர் இன்று சிலரேயாவர்; அவருள்ளும் அவற்றை எடுத்து யாவரும் விளங்க இயம்பும் ஆற்றல் பெற்ருேர் மிகச் சிலரேயாவர்; அவ்வாறு உரைப்பதோடமையாது, அவற்றை எழுதி வெளியிட்டு பிறர்க்குக் காட்டிப் பயன்பெறச் செய்யும் வன்மை மிக்கோர், அவருள் கைவிரல் மடித் தெண்ணத்தக்க அத்துணைச் சில்லோரே யென்று செப்பலும் வேண்டுமோ!

சங்க இலக்கியங்களுள் ஒன்ருக எண்ணப்படும் பதிற்றுப்பத்து என்னும் நூலிற் கிடைக்கப்பெற்ற செய்யுள்களுக்கு பண்டையுரைகளையுந் தழுவி ஆராய்ச்சியுரையொன்றை எழுதி வெளியிட்டவர், எமதரிய நண்பர், பண்டிதர் சு. அருளம்பலம் அவர்களாவர். அவரின் நுண்மாணுழைபுலத்திற்குப் பிற ஆராய்ச்சியுரைகளும் சான்ருவனவேனும், இஃதொன்று அதை வலியுறுத்தி அரண் செய்யும் அசையாத சான்ருகும்.

அவரது மறைவு செந்தமிழ் உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பெரியதோரிழப்பே யென்றல் மிகையாகாது. அவரது பூதவுடல் மறையினும், மதிநுட்பம் என்றும் அழியாது விளங்கும்.

அவரைப் பிரிந்து மிக்க அல்லர் எய்தும் அவரது பாரி, மக்கள், உறவினர்க்குத் தமிழ்வாணர் பெரிதும் தம் அநுதாபத்தைத் தெரிவிப்பதோடமையாது, அவர் சந்ததியார் நல்வாழ்வெய்தவும், அவர் ஆன்மா சாந்தியடையவும் இறைவனை வேண்டுவதும் இன்றியமையாத கடப்பாடேயாகும்.

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கமும் அறிவும்

சி. தில்லைநாதன் B. A. Hons., M. A. (Cey.)
விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை.

பண்டிதமணி அருளம்பலவனாரை நான் சந்தித்திருக்கிறேன். எளிமை, இனிமை, தன்னடக்கம், குருபக்தி, இறைபக்தி, தமிழ்ப்பற்று ஆகியவை நிறைந்ததோர் அறிஞர் அவர். 'கதம் காத்துக் கற்று அடங்கி', 'நிறைகுடம் தளம்பாது' என்ற உண்மைக்கு ஏற்றதோர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்த அவ்வறிஞர் மறைந்து விட்டது தமிழுலகுக்கு ஒரு பேரிழப்பாகும்.

அருளம்பலவனாரின் வரலாற்றினை அறிய விழைந்து அவர் வெளியிட்ட பதிற்றுப் பத்து ஆராய்ச்சியுரைகளின் வாழ்த்துரைகளைத் துருவிப் பார்த்தேன். நூல்களுக்கு அணிந்துரைகளும் வாழ்த்துரைகளும் வழங்குவோர் நூலாசிரியர்களின் இயல்புகளையும் வரலாறுகளையும் விரிப்பதுமுண்டல்லவா? ஆனல், நூலைப்பற்றி விளம்புவதற்கு அதிகமாக ஒன்றுமில்லாத போது மட்டுமே அவ்வாறு நிகழுமென்பதைத்தான் அருளம்பலவனாரின் பதிற்றுப் பத்து ஆராய்ச்சியுரை என்ற நூலுக்குப் பேரறிஞர்களால் வழங்கப்பட்ட வாழ்த்துரைகளும் அணிந்துரைகளும் தெளிவுபடுத்தின.

எனவே, பண்டிதமணி அருளம்பலவனாரை அவரது தமிழ்த் தொண்டிலேதான் காணவேண்டும். அறிஞர் பலருக்கு அச்சமூட்டிய பதிற்றுப் பத்தினை ஆராயும் துணிவு இவ்வளவு எளிய ஒல்லியான மனிதருக்கு எவ்வாறு வந்ததென்று சிலர் எண்ணலாம். ஆனற் புரிந்துகொள்வதற்குத் துன்பமான ஒரு பழையவுரையை உடைத்தாயிருந்த பதிற்றுப் பத்துக்கு விரிவும் விளக்கமும் வாய்க்கப்பெற்றதோர் உரையினை வகுக்கப்பெற்றதன் மூலம் தமிழ் கற்போருக்குத் தடையாயிருந்த பூட்டினைத் திறந்துவிட்டவர் அவர்தான்.

அவரது நுண்ணிய ஆராய்ச்சித் திறனையும் சலியாத உழைப்பினையும் மெச்சிய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன் "உரையாசிரியர் திருவாளர் அருளம்பலம் அவர்களின் இலக்கியப் பயிற்சியும் ஆராய்வுத் திறனும் போற்றற்குரியன. பண்டைய மரபினையுங் காத்து முன்னைய உரையையும் போற்றித் தாம் காணும் புதிய உரைப் பகுதிகளையும் இயைபுபடுத்தி இதனைத் தந்துள்ளார். அடிக் குறிப்பாகவும் மேற்கோளாகவும் அவர் எடுத்துக்காட்டியுள்ள குறிப்புக்கள் எண்ணில. பொறுமை மிக்க உழைப்புத் திறனும் நுண்ணிய ஆராய்ச்சி வன்மையும் விளங்கும் வகையில் ஆங்காங்கு அமைந்துள்ள விளக்கங்கள் பற்பல" என்றார். இப்பாராட்டு மொழிகள் பண்டிதமணி அருளம்பலவனாரின் அறிவினையும், அவ்வறிவினலே தமிழ்கூறும் நல்லுலகம் பெற்ற நற்பயனையும் காட்டுவன.

பண்டிதமணி அருளம்பலவனார் பதிற்றுப்பத்துக்கு மட்டுமல்லாமல், முல்லைப் பாட்டுக்கும் பட்டினப்பாலைக்கும் ஆராய்ச்சியுரை எழுதிய மறைமலையடிகளின் பாதையிற் சென்று திருமுருகாற்றுப் படைக்கும் பெரும்பாணாற்றுப்படைக்கும் சிறந்த ஆராய்ச்சியுரைகள் எழுதியுள்ளார். அவர் திருவாசகத்துக்கும் உரையெழுதியுள்ளாரென்றும் அவ்வுரை அச்சிலிருப்பதாகவும் கேள்விப்படும்போது ஒதுங்கியிருந்துகொண்டு அவர் செய்த ஓயாத தமிழ்த் தொண்டின் பெருமையே துலங்குகின்றது.

காலமுறைப்படி அமைக்கப்பட்ட பதிற்றுப்பத்து சேரமன்னர் சிறப்பினை விளம்புவது. போர்ச் செய்திகளை மிகுதியாகக் கொண்டது; சேர தேசத்தின் வளத்தினையும் வாழ்வினையும் சித்திரிப்பது. யாழின் வர்ணனையோடு தொடங்கும் பெரும்பாணாற்றுப்படை உவமை நலன் மிகுந்தது; ஐந்நில அழகையும் வாழ்வையும் காட்டுவதோடு பாணர் வாழ்வை விளக்குவது. 'வீடு பெறுதற்குச் சமைந்தானேர் இரவலனை வீடுபெற்ருன் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்திய"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகாற்றுப்படை முருகனது ஆறு படை வீடுகளை அழகுற வர்ணிப்பது; வழி பாட்டுச் சிறப்புக்களையும் முறைகளையும் இயம்புவது; உலக வாழ்வில் மாறி மாறித் தோன்றும் இன்ப துன்பங்களைக் காட்டுவதன்மூலம் மெய்யறிவினைத் தோற்றுவிப்பது, நேரடியாக இறைவனை விளிக்கும் உணர்வுப் பாடல்களையும் பல்வகை நாட்டுப் பாடல் முறைகளைக் கையாண்டு அமைக்கப்பட்ட இசைப் பாடல்களையும் கொண்ட திருவாசகம் ஆழ்ந்த தத்துவங்களை அடக்கியது; ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவது.

இவ்வாறான பல்வகைப் பண்புகள் பொருந்தப்பெற்ற நூல்களுக்கு அவற்றின் நோக்கமும் சுவையும் குறைபடா வகையிலே அகல உரைகள் எழுதுவதற்கு ஆழமான ஆராய்ச்சியறிவும் அயரா உழைப்பும் அவசியமென்பது கூறுமலே விளங்கும். இதுபற்றி எண்ணிப் பார்ப்பவர்களுக்குத் தன்னையும் தன் கைப்பொருளையும் தேய்த்துத் தமிழ்த் தொண்டாற்றிய பண்டிதமணி அருளம்பலவனாரின் பெருமை புலனாகும். அவரது ஆராய்ச்சியுரைகளைப் படித்துப் பயன்பெறப் போகிறவர்களோடு அவர் என்றைக்கும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கப்போகிறார்.

சுவர்க்கமென்பதோர் உலகம் உண்டென்பது உண்மையென்றால், அங்கும் அடக்கமும் அறிவும் குடிகொண்ட அருளம்பலவனார் பேராசிரியர் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், ஆறுமுக நாவலர், தாமோதரம்பிள்ளை, மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார் முதலிய தமிழ்ப் பேரறிஞர்களுடன் இன்புற்றிருப்பார்.

பண்டித மணி அருளம்பலவனாருக்கு யாம் செயத் தக்க கைம்மாறு யாது? ஆறுமுகநாவலரும் தாமோதரம்பிள்ளையும் சபாபதி நாவலரும் தோன்றிய மண்ணிலே அவர் தோன்றிய பெருமையினையும் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற சிறப்பினையும் பேசி வழக்கம்போல வாய்ப்பந்தல் கட்டிக்கொண்டிருப்பதால் மட்டும் பயனில்லை. தமிழின் பெருமைகளைப்பற்றி வியந்து வியந்து பேசுவதிலே பலர் பொழுதைக் கரைத்துக்கொண்டிருந்த வேளையிலே உருப்படியான தமிழ்த் தொண்டாற்றியவர் பண்டிதமணி அவர்கள். அவரது ஆராய்ச்சியுரைகள் எளிதிற் பலருக்கும் கிடைக்க யாம் வகை செய்யவேண்டும். அவரது வரலாற்றினைச் செவ்விய முறையிலே வெளியிடவேண்டும். அவரது பணிகளை முறையாக மதிப்பிடவேண்டும். அவர் காட்டிய வழியிற் செல்லத்தக்க அறிவினையும் அடக்கத்தினையும் துணிவினையும் எம்மிற் பலர் பெறவேண்டும்.

பண்டிதமணி அருளம்பலவனாரின் நினைவு தமிழ்கூறும் உலகுக்கு ஒளிகூட்டுவதாக!

---

**அ. மு. பரமசிவானந்தம்,** M. A., M. Lit.,

பேராசிரியர், பச்சையப்பர் கல்லூரி.

—

காரைநகர்ப் புலவர் - பண்டிதமணி. சு. அருளம்பலவனார் அவர்கள் இறையடியுற்றமை அறிந்தேன். அவர் நல்லுயிர் இறையருளால் இயைவதாக.

தமிழன்னையின் நலஞ் சிறக்கும் வகையில் பல்லாற்றானும் அரும்பணி புரிந்த அன்னார் மறைவு தமிழ் உலகுக்கு நட்டமாகும். பல நூல்களுக்கு நல்லுரை கண்டும், ஆய்ந்து அரும் பொருள் உணர்த்தியும் தமிழ்த் தொண்டு செய்த அவர்தம் புகழ் பரவுவதாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

காரைநகர்

# பண்டிதமணி திரு. சு. அருளம்பலனாரவர்களின்

## தேகவியோகம் பற்றிய

# இரங்கற்பா.

ஸ்ரீமத் சி. சுப்பிரமணியதேசிகர், காரைநகர்.

தினவெண்பா

ஆண்டு பராபவ வைகாசி யைந்துபொன்நாள்
ஈண்டமா கார்த்திகை யெய்தச்சீர்—பூண்டோன்
அருளம் பலவ னடைந்தனனே யாடல்
அருளம் பலவ னடி.

வரலாற்றாசிரியம்

திருவள ரீழமாம் பெருவள நாட்டின்
சிரமென மருவித் திகழியாழ்ப் பாணத்து
மேலைத் திசையது வேலைசூழ் வுற்றது
மருதமு நெய்தலும் மயங்கிய மரபிற்
பலவித வளனும் நிலவு நலத்தது
தாளாண்மை மிக்க வேளாண் குடிகளும்
மற்றைய குடிகளு முற்றிடப் பெற்றது
பலவகைக் கல்வியும் பலவகைச் செல்வமும்
நிறைதரு மாந்த ருறைதரு சிறப்பது
உய்திற மருளுஞ் சைவவா லயம்பல
இடைதொறு மிடைதொறு மியைந்து திகழ்வது
காரைமா நகரெனும் பேரு ராகும்;
அந்நகர் வடபால் மன்னிய வலந்தலைப்
பகுதியில் வாழ்ந்த தகுதிசால் மருத்துவன்
சுவாமி நாத னவர்மழ குடைய
சிதம்பரத் தெரிவையை இதம்பெற மணந்து
பெற்றநற் புதல்வன்; நற்றவர் கூறிய
அருளம் பலவனாய் மருவும் பெயரினன்;
தொடக்கக் கல்வியவ் விடத்துள பள்ளியில்
பயிலுங் காலையில் நயமலி தந்தையை
இழந்தே கல்வியில் தளர்ந்தன னாயினும்
இருபான் வயதில் விரவிய அறிவினால்
ஆசிரிய பயிற்சிபெற் றாசிரிய னாயினன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றியும்,
சீரியாழ்ப் பாண ஆரிய திராவிட
பாஷாபி விருத்திச் சங்கப் பரீக்ஷையில்
பிரவேச பண்டிதன் பாலபண் டிதனெனும்
பட்டம் பெற்றே திட்ப முற்றனன்;
மதுரைமா நகரில் மருஉந்தமிழ்ச் சங்கப்
பண்டித பரீக்ஷையில் பண்டித ருயினன்;
ஓவியக் கலையில் மேவிய திறமையால்
சான்றிதழ் பெற்றுத் தகைமை யெய்தினன்;
சொந்தவூ ரதனில் சுப்பிர மணிய
வித்தியா சாலை முதலாப் பற்பல
வித்தியா லயங்களில் நற்றமிழ் பயிற்றி
உதவியா சிரியனுய்த் தலைமையா சிரியனுய்
ஆரு ருண்டுக ளரும்பணி யாற்றினன்;
நல்ல தம்பியும் இல்சிவ காமியும்
தந்த விஜய சௌந்தரம் மாவை
வாழ்க்கைத் துணைவியாய் மணஞ்செய்து கொண்டு
நல்லற மாகிய இல்லறம் பேணினன்;
அந்தநல் லறத்தின் வந்திடு பேருய்
மகேசுவர நாதனே மகேசுவர தேவி
சிவானந்த நாதன் தியாகராஜ நாதன்
கலாதேவி தன்னுடு சிவயோக நாதன்
என்னும் மக்களை யீந்தநற் றந்தை;
மக்களுக் காற்று முதவியில் மிக்க
கல்வியி லுயர்வு மல்கிடச் செய்தனன்;
அஃதான்று,
பொருவிலாத் திருமுரு காற்றுப் படைக்கோர்
ஆராய்ச்சி யுரையினை ஆக்கிவெளி யிட்டனன்:
பெரும்பா ணற்றுப் படையாய் வுரையினை
விரும்பவெளி யிட்டும், அருந்தமிழ் நூல்களில்
தானே யொப்புத் தனக்கா தலினுல்
ஒத்த பதிற்றுப் பத்தென் றுரைக்கும்
நூலி னுராய்ச்சி வேலையைத் தொடங்கி
அரியன வாய விரிவுகள் எழுதி
இருபாக மாக இனிதுவெளி யிட்டும்
சங்கநூற் பயிற்சியில் தகைமை யெய்தினன்;
அதனுல்,
சாகித்திய மண்டலம் தரும் பரிசு பெற்றனன்;
பாராட்டு விழாவில் பண்டித மணியே
சங்கநூற் செல்வன் என்றித் தகுதிப்
பெயர்களைப் பெற்றும், உயர்பொன் னுடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்கிழிப் பரிசில்கள் பெற்றுமுயர் வெய்தினன்;
செந்தமிழ் நாட்டில் சிவதலம் பலவும்
சென்று வணங்கிடப் பன்முறை யாத்திரை
செய்தே யறிவுந் திருவுமெய் தியவன்;
பலவகைப் பொருள்களில் இலகுநடை தன்னில்
மேடைப் பேச்சும் வானொலிப் பேச்சும்
நிகழ்த்தியெவரும் மகிழ்ந்திடச் செய்தனன்;
கட்டுரை பலவும் பத்திரி கைகளில்
வெளியிட் டதனால் விளங்கிடத் தெரித்தனன்;
தெய்வச் செந்தமிழ்த் திருவருட் பாக்களைச்
செவ்விதி னுய்ந்திடச் சிந்தையிற் கொண்டு
திருவாசக மெனும் திருவருள் நூலின்
உரையா ராய்ச்சியை வரைதரு காலை
அறிஞர்கள் பலரும் முறைமையி லெழுதிய
பழைய வுரைகளை விழைவொடா ராய்ந்தே
இயைவன கொண்டும் இயைபில வொருவியும்
தன்கோள் நாட்டத் தக்கமேற் கோள்கள்
நன்கு காட்டியும் நயம்பெற வெழுதினன்;
அவ்வுரை யதனை யச்சுவா கனத்தில்
முந்நூறு பக்கம் மன்னிட வேற்றினன்;
தேக வியோக மாகுநாட் காலையும்
சிலபக் கங்களை நலமுறு பிரதியோ
டொப்பு நோக்கி யச்சுக் கனுப்பினன்;
தன்னா ராய்ச்சி யுரைக ளெவற்றையும்
என்னோ டளவளாய் இயற்றுங் காலையும்
திருக்கோவை யாருரை தேருங் காலையும்
களவிய லுரையினைப் பயிலுங் காலையும்
உவந்தியான் கூறினும் கடிந்தியான் கூறினும்
மனநிலை திரியாத் தனிநல முடையவன்;
தனைக்கடிந் துரைப்பவர் எனையல திலரென
அன்பொடு மொழியும் பண்புடை யொருவன்
எனைப்பே ணினரில் தனிச்சிறப் புடையவன்;
வயிற்றிடை வந்த துயர்ச்சி நீங்கச்
சத்திர சிகிச்சை யுற்றிடப் பெற்றும்,
அந்திய நிலையில் வந்த தளர்வினால்
அரசினர் மருத்துவ மனையிடை யமர்ந்தும்
உடல்நலம் குன்றின னாயினும் திடமுறும்
அறிவுநலம் குன்றா தந்தம் வரையும்
திருவாசகவுரை மருவுசிந் தையனாய்
சைவநூ லாய்வினி லெய்தி யிருந்தனன்;
இனையன பலவியல் அணிபெறு மண்ணல்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளம் பலவனும் பொருவரும் நண்பன்;
எழுநான் கிரட்டி தழுவிய வயதில்
பராபவ ஆண்டில் விரிவுவை காசியில்
ஐந்தாம் நாளில் வந்தவி யாழனில்
இரவுப் பொழுது புலர்வதன் முன்னர்
அமாவா சையினில் அமர்கார்த் திகையில்
சிவசிவ நாமம் தழுவுநா வுடனே
அருளினு லைந்தொழிற் றிருநடம் புரியும்
திருச்சிற் றம்பல வாணன் திருவடி
அருத்திபெற் றின்ப மலர்ந்து மன்னினனே.

சாந்திரஸ்து.

# ஈழத்துக்குப் பெருமை தரும் உரையாசிரியர்

வி. செல்வநாயகம் B. A. (Lond) M. A. (Annm)
பேராசிரியரும் தமிழ்த் துறைத் தலைவரும். இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை.

ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு எழுதப்படுங் காலத்தில், அதன்கண் உரையாசிரியர் அருள்ம்பலவனுருக்கு ஒரு முக்கிய இடம் அளிக்கப்படும் என்பதிற் சந்தேகமில்லை. தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் வாழ்ந்த புலவர்களும் எழுத்தாளர்களும் பலர்; எனினும், சிறந்த செய்யுளிலக்கியங்களுக்கு உரையெழுதி, அவற்றிலுள்ள சிறப்புக்களை எடுத்துக்காட்டி, அவற்றை மக்கள் மனங்கொண்டு படித்து அனுபவிக்குமாறு செய்துள்ள உரையாசிரியர்கள் மிகச் சிலரென்றே கூறலாம். பெயர் தெரியாத ஒருவர் புறநானூற்றுச் செய்யுட்களுட் சிலவற்றிற்கு எழுதிய பழைய உரை செய்யுள் உரைகளுளெல்லாம் சிறந்தது. பத்துப் பாட்டு, கலி, சிந்தாமணி என்பனவற்றிற்கு நச்சினுர்க்கினியர் எழுதிய உரை, பழைய செய்யுட்களின் பொருளையும் அவை குறிக்கும் சுவை முதலியவற்றையும் படிப்போர் தெளிந்துகொள்ளுதற்கு உதவியபோதும், சிற்சில இடங்களிலே அவர்கள் கண்டபடி கொண்டு கூட்டித் தம் வித்துவச் சிறப்பைக் காட்ட முற்பட்டதனுல், அவர் உரை மக்களுக்குப் பெரும் பயன் அளித்துளது என்று கூற முடியாது. பாராட்டத்தக்க முறையிலே பேராசிரியர் திருக்கோவையாருக்கு உரை இயற்றினுர், அவரைப் போலவே, அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்கும் பரிமேலழகர் திருக்குறளுக்கும் உரைசெய்தனர். இந்த உரையாசிரியர் பரம்பரையில் வந்த அருளம்பலவனுர் பதிற்றுப்பத்து என்னும் சங்கநூலுக்கு இயற்றிய உரை அந்நூல் நிலவுறுங் காலம்வரை நிலவக்கூடிய சிறப்பு வாய்ந்தது. சங்கநூல்களுள் உரை கூறுதற்குக் கடினமான பலசெய்யுட்களைக் கொண்டுள்ள இந்நூலுக்குத் தெளிய உரையொன்றை வகுத்து, யாவரும் இந்நூலைப் படித்து அனுபவித்தற்கு உதவியமை பாராட்டத்தக்க தமிழ்த்தொண்டாகும். ஈழநாடும் ஒரு சிறந்த உரையாசிரியரைத் தோற்றுவித்துளது என்றுநாம் பெருமை பாராட்டிக் கொள்ளக்கூடிய வகையிலே அவ்வுரை அமைந்துள்ளது.

பல ஆண்டுகளாகத் திருவாசகத்தை ஆராய்ந்து படித்து அனுபவித்து அதற்கு ஒரு உரை எழுத முற்பட்டு, அதை எழுதி முடிக்கமுடியாமற் போனது வருத்தத்திற்குரியதொன்ருகும். அவர் எழுதி முடித்ததை அச்சிட்டு மக்களுக்குப் பயன்படச் செய்தல் தமிழார்வம் கொண்ட ஈழத்துப் பெருமக்களின் கடனுகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலமற்றுத் தமிழிற்கு உழைத்தவர்

ச. தனஞ்சயராசசிங்கம், B. A. (Hons) C. L. M. Litt.
தமிழ்விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை.

பண்டிதமணி சு. அருளம்பலவனாரின் அகால மறைவு தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஒரு பேரிழப்பாகும். இற்றைக்கு ஆறு ஆண்டுகளுக்கு முன் யான் பண்டிதமணியை அண்ணாமலை நகரில் கண்டு உரையாடிய பொழுது அவர் பதிற்றுப்பத்திற்குப் புத்துரையொன்றனை எழுதி முடித்துவிட்டதாகக் கூறினார். தமிழ்க்கல்விக்குச் சிறந்து விளங்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அவரின் பதிற்றுப்பத்துப் பதிப்பினைப் பாடநூலாக ஏற்று அவரைச் சிறப்பித்துள்ளது. ஈழத்துச் சாகித்திய மண்டலமும் அன்னாரின் அரிய முயற்சியினைப் பாராட்டிப் பொற்கிழியொன்றனை வழங்கியுள்ளது. அவர் என்னைக் காணும்பொழுதெல்லாம் தாம் திருவாசகத்திற்குப் புத்துரை யொன்றனை எழுதிவருவதாகக் கூறினார். யானும் இப்புதிய தமிழ்ப்பணிக்கு ஏற்றவர் அவரேயெனக் கூறி அவரை ஊக்குவித்து வந்துள்ளேன். அவர் திருவாசகம் பற்றிக்கொண்ட புதிய கருத்துக்களிற் சிலவற்றினைச் சென்ற ஆண்டில் திருக்கேதீசுரத்தில் யான் கேட்டுச் சுவைக்க நேர்ந்தது.

மெய்வருத்தம் பாராது பசிநோக்காது எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது கருமமே கண்ணாகத் தமிழிற்கு உழைக்கும் புலவரொருவரை ஈழத்தவர் இழந்துவிட்டனர். அவர் நம்மைவிட்டு மறைந்தாலும் அவரின் தன்னலமற்ற தமிழ்ப்பணியும் செவ்விய வாழ்க்கை முறையும் யாவர்க்கும் என்றும் வழிகாட்டிகளாக அமையுமென எண்ணுகின்றேன்.

பண்டிதமணி அவர்களின் ஆன்மா சிவன் திருவடி நீழலில் சாந்தியடைவதாக.

# பழகுதற்கு இனிய பண்டிதமணி

புலவர், சு. கு. அருணாசலம் எம். ஏ., பி. ஓ. எல். சேலம்.

சங்கநூற் செல்வர், பண்டிதமணி சு. அருளம்பலவனாரோடு எனக்குச் சென்ற ஐந்தாண்டாகக் கடிதவாயிலாகத் தொடர்பு உண்டு. ஆயினும் சென்ற ஆண்டில் சென்னை வந்தபோது அவரைக் குடும்பத்தாருடன் காணும் பேறு பெற்றேன்.


'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சி
நட்பாங் கிழமை தரும்' [தான்

—என்னும் குறளுக்கொப்ப ஒத்த உணர்ச்சியே நட்பாம் உரிமையைக் காணுமுன்னே எங்கட்குக் கொடுத்தது. அவருடைய பதிற்றுப்பத்துரை உணர்ச்சி ஒத்த நண்பர் பலரை உண்டாக்கியது. அதில் யானும் ஒருவன். அருளம்பலவனாருடைய பதிற்றுப்பத்து உரையை உள்ளாதிருத்தல், என் அளவிற்றன்று என்று எண்ணும் உணர்ச்சியை அது எல்லார்க்கும் ஊட்டவல்லது. நண்பரைப் பிரிதலினும் கொடுமை வேறில்லை.

பண்டிதமணி பழகுதற்கு இனியர்; எளியதோற்றம் உடையவர். 'ஆகித்தோன்றும் பாங்கோர்' என்பதற்கிலக்கியம் ஆனவர்; "பணியுமாம் என்றும் பெருமை" என்னும் பொய்யில் மொழிக்கு இலக்கு ஆனவர்; அவருடைய குடும்பத்தார்க்கு என் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்; அவர் பிரிவு அவர் குடும்பத்திற்கு மட்டும் இழப்பன்று. தமிழகத்திற்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.


என்னினிச்செயல் நமக்குள நெஞ்சமே
இருந்தமிழ்க்குயர் ஞாலம்
முன்னு சங்கநூற் செல்வன் பண்டித
மணியெனக் கொண்டாடு சீர்த்தி
மன்னு நற்பண்பு யாவையும் திரண்டதோர்
வடிவு அருளம் பலவனும்
நன்னராளனை நல்லாசிரியனை
நண்பனையிழந் தேமால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிதமணியவர்களுக்கு காரைநகர் இந்துக்கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பங்குகொண்ட அறிஞர் பெருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளம்பலவனூர் மகிமை

கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை Ph. D. (Cey); D. Phil (Oxon)
தமிழ்த்துறை, இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை.

பிறந்தவர் இறத்தல் நியதி என்று தெரிந்தபோதிலும் சிலர் மறைவு சிலருக்குத் திகைப்பை ஏற்படுத்துகிறது. மரணத்தை வெல்லும் நோக்கமும், முயற்சியும் மனிதரிடம் நீண்டகாலமாக இருந்து வருகின்றன. பூதவுடலை நிலைநிறுத்தும் முயற்சியில் மனிதனுக்கு இன்னும் வெற்றி கிடைக்கவில்லை. ஆனல் புகழுடலை நிலைநிறுத்தும் முயற்சியில் மனிதர் சிலர் வெற்றியடைந்துள்ளனர். அந்தச்சில மனிதருள் அருளம்பலவனுரும் ஒருவர்.

அருளம்பலவனூர் மறைவு தமிழறிஞர்களுக்குத் திகைப்பையே தருகிறது. பதிற்றுப்பத்து, பெரும்பாணாற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, திருவாசகம் என்றெல்லாம் தமிழிலக்கியங்களும், சைவ நூல்களுக்கும் ஆராய்ச்சியுரை செய்து தமிழின் பெருமையையும், சைவத்தின் மேன்மையையும் புத்தொளியோடு துலங்கச்செய்த பேரொளிப்பிழம்பான அருளம்பலவனூர் மறைந்துவிட்டாரென்றால் காலன்செய்த கொடுமையால் ஏற்பட்ட திகைப்பைக்காலம்தான் மாற்றவேண்டும்.

பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை அருளம்பலவனூருக்கு என்றும் ஒரு நினைவுச்சின்னமாக இருக்கும். அவர் உயிருடன் வாழ்ந்த பொழுது, சில பரிசில்களையும் ஓரளவு புகழையும், சங்கநூற் செல்வர் முதலிய பட்டங்களையும் அவருக்குக் கொடுத்த பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை, இனி அவருக்கு உரிய புகழை வழங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

அருளம்பலவனூரைக் கடைசியாகக் கௌரவிக்கும் பேறு இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்துக்கே கிடைத்ததென்று நினைக்கிறேன். சங்க நூல்களுக்குப் புதிதாக உரை எழுத முற்பட்டவருக்குப் புதியதாக ஏற்பட்ட தமிழ்ச் சங்கம் கௌரவம் கொடுத்தது பொருத்தமானதே. அருளம்பலவனூர் தமிழ்ச்சங்க கலைவிழாவில் பேசுவதற்குத் தேர்ந்தெடுத்த விஷயம், சேரரின் கொடைச் சிறப்பு என்பதாகும். அன்றைய பேச்சு அவர் பரந்த நூற் புலமைக்கு எடுத்துக்காட்டாகும். பழந்தமிழிலக்கியங்களும், இலக்கணங்களும் அவரிடம் எவ்வாறு பணிபுரிகின்றன என்பதை முன்னர் அவர் ஆராய்ச்சியுரைகளில் கண்டவர்கள், அன்று கண்முன்னூலேயே காணக்கூடியதாயிருந்தது.

# தமிழ் ஞானப் பெருமலை.

வித்துவான். அ. மா. பரிமணம், எம். ஏ., எம். லிட்.,
தமிழ் விரிவுரையாளர், அழகப்பா கல்லூரி.

காலமும் இடமும் பண்டிதமணி அருளம்பலவனூரைக் காண உதவவில்லையே யன்றி, அவர்களைக் கேட்டறியவும், அவர்தம் நூல்கள் வாயிலாகக் கண்டறியவும் தடைசெய்யவில்லை.

தமிழ் ஞானப் பெருமலையாய் அவர்கள் திகழ்ந்தமையினை அவர்தம் நூல்கள் தமிழ் கூறும் நல்லுலகிற்கு உணர்த்திக் கொண்டேயிருக்கும். கபிலரை, பரணரை, மற்றைச் சங்கச் சான்றோர்களை யான் காணவில்லை; பரிமேலழகர், பேராசிரியர் அடியார்க்கு நல்லார் போன்ற தமிழ்ச் சான்றோர்களையும் காணவில்லை. அதைப் போலவே, பண்டிதமணி அருளம்பலவனூரையும் நான் நேரில் காணவில்லை: அவர் தம் புலமைத் திறத்தால் அடியார்க்கு நல்லார் போன்ற அருந்தமிழ்ச் சான்றோர் வரிசையில் இடம்பெற்று, புகழ் விளக்குத் தொடர்ச்சியில் ஓர் ஒளிவிளக்காய்த் திகழ்கின்றூர். தமிழும் தமிழ் மக்களும் உள்ளவரை அருளம்பலவனூரவர்கட்கு ஒரு தனிச் சிறப்பான இடமுண்டு.

தங்கள் வீடும் நாடும் அறிந்த அளவில் புலமை ஒளி வீசி விளங்கிய அவர்கள் இன்று தமிழ் கூறும் நல்லுலகம் முழுதும் சுடர்விட்டு விளங்குவதோடு, தெண்ணிலா மலர்ந்த வேணியனைத் தினம் நினைந்த இயல்பால், அப்பெருமானுடைய அனைத் தெலும்பு உள்நெகச் செய்யும் ஆனந்த மாக்கருணை வெள்ளத்தில் திளைப்பார் என நினைந்து ஆறுதல் கொள்ளவேண்டும்; கொள்வீராக.

அவர்தம் தமிழ்வாழ்வு புலவர் பாடும் பொறப்புடையது. காவியம் பாடும் கவினுடையது. அது அம்பலத்தடியான் அருளமைதியில் நிறைவுபெறுவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சால்பின் கரையிழந்தோம்

பண்டிதர் செ. சிவப்பிரகாசம்
ஆசிரியர், தாவடி, கொக்குவில்.

—●—

நில்லாத இவ்வுலகில் நில்லாத உம்முடலைப்
பொல்லாத காலனூர் போக்கினரோ — நல்லோனே!
பண்டிதநன் மாமணியே பாரோர் துயர்கொண்டு
கண்ணிறைநீர் சிந்தினரே காண். 1

புத்திரரும் மித்திரரும் புன்மைத் துயர்கொள்ளப்
பத்தியினால் யானும் பரிதபிக்க — வித்தகனே!
மண்ணுலகோர் யாரும் மயங்கிக் கலங்கிடவோ
விண்ணுலகம் புக்கீர் விரைந்து. 2

நூறு வயசிருந்து நூல்பலவும் ஆராய்ந்து
வீறு புலமை விளங்கவே — மாறிவ்
உரை விளங்க வைப்பீரே என்றுன்ன ஊழால்
தரை கலங்கச் சென்றீரோ தான். 3

கல்வித் திறமும் கசடில் உரைத்திறமும்
பல்வித் தகர்க்கும் விருந்தாக — நல்லனவாம்
நூல்கள் எழுதி நுணுகிப் புலங்கொளுத்துஞ்
சால்போர் இனியாரோ சாற்று. 4

நூலின் உரை இழந்தோம் நூல்கேட்கும் வாயிழந்தோம்
சால்பின் கரையிழந்தோம் தக்கோனே! — காலன்
கருதா துனைக்கொன்று கல்விப் பெருக்கை
மருளாக மாய்த்தனனே மற்று. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அடக்கத்தின் உரு'

ச. அம்பிகைபாகன் B. A.
அதிபர், வைத்தீசுவர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

பண்டிதர் சு. அருளம்பலவனாரை நினைக்குந்தோறும், நினைக்குந்தோறும் அவருடைய அடக்கமான தோற்றமே என் மனக்கண் தோன்றுகிறது. அவரை 'அடக்கத்தின் உரு' என்று கூறுதல் மிகையாகாது. நுனிப்புல் மேய்வோரின் அட்டகாசங்கள் மலிந்திருக்கும் இக்காலத்தில், கற்றடங்கிய அருளம்பலனார் போன்ற சான்றோரைக் காண்பதரிதிலும் அரிது.

அருளம்பலவனாரை எனக்கு அறிமுகஞ் செய்து வைத்தவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளையாவர். ஒருமுறை பண்டிதர் அருளம்பலவனாரின் தகுதிகளைப்பற்றி நீண்டதோர் கடிதம் எழுதி, அதன் முடிவில் "இவருக்குச் செய்யும் உதவி, தமிழ்த் தாய்க்குச் செய்யும் உதவியாகும்" என்று எழுதியிருந்தார். அன்று தொடக்கம் அருளம்பலவனாருக்கு என்னால் செய்யக்கூடிய உதவிகளைச் செய்து வந்தேன்.

அருளம்பலவனார் தமது தமிழ்த்தொண்டுகளை பலவசதியீனங்களுக்கிடையே செய்துவந்தார். அவர் பெரும்பாலும் ஆசிரியத் தொழில் புரிந்து வந்த இடங்கள் தமிழ் வழங்காத இடங்களாக இருந்தன. அவ்விடங்களில் தமது ஆராய்ச்சியைப் பற்றிக் கலந்தாலோசிப்பதற்கு அறிஞர்களைக் காணமுடியாது; நூல்நிலைய வசதிகளும் கிடையா. மேலும் அவருக்கு நெடுங்காலமாகக் குடல் நோயிருந்து, சிலவருடங்களுக்கு முன் கடும் சத்திர சிகிச்சை பெற வேண்டியிருந்தது. இவ்வித இடையூறுகளிருந்தும், தமிழ் ஆராய்ச்சியில் இருந்த சிரத்தையே, அவரை மேலும் மேலும் ஊக்கி வந்தது. சிரத்தையிருந்துவிட்டால், எடுத்த காரியம் தவருது கைகூடும் என்னும் உண்மையை நாம் உபநிடதங்களில் பரக்கக் காணலாம்.

அவருடைய சிரத்தைக்கு ஓர் உதாரணம்: சென்ற தைமாதத்தில் அவர் என்னைச் சந்தித்தபோது, அவருடைய திருவாசகப் பதிப்பைப் பற்றிப் பேச்சு வந்தது. நான் "சித்தாந்தம்" ஆசிரியர் மு. அருணசலம் திருவாசகப் பதிப்பொன்றை வெளியிட்டுள்ளாரென்றும் (அதைப் பார்த்தால் பிரயோசனமாயிருக்குமென்றும்) அப்பதிப்பு சிதம்பரம் சென்று திரும்பிய பண்டிதை அப்பாக்குட்டியிடமிருக்கக்கூடுமென்றும் கூறினேன்.

அடுத்தநாட் காலை கடும் மழை, நான் தெல்லிப்பழைக்குச் சென்று வீடு திரும்பும் வழியில் பண்டிதை வீட்டுக்குச்சென்றேன். அங்குச்சென்றதும் பண்டிதர் அருளம்பலவனாரைக் கண்டேன். கண்டதும் திகைத்து விட்டேன். கடும் மழையையும் தமது உடல் நிலையையும் கவனியாது நான் குறிப்பிட்ட திருவாசகப் பதிப்பைத் தேடி மல்லாகம் வந்துவிட்டார். நான் காரில் போவதற்கே சிரமப்பட்டேன். அவர் பஸ்மூலம் போவதற்கு எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்!

இன்னுமோருதரணம்: அருளம்பலவனார் கடைசிக்காலத்தில் தாம்எழுதிய திருவாசக உரையை வெளியிடுவதில் ஈடுபட்டிருந்தார். ஆசுப்பத்திரிக்குப் போகுமுன் ஒரு பகுதி அச்சாகிவிட்டது; மறு பகுதி அச்சுவேலை நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆசுப்பத்திரியில் அவர் நிலை மோசமாகி இப்பவோ பின்னையோ என்னும் நிலையிலிருந்தார். அப்பொழுதும் அவர் மனம் திருவாசகப் பதிப்பில்தானிருந்தது. அந்நேரத்திலும் "புறூவ்" தாள்களைப் பார்க்க விரும்பி, டாக்டர்களின் அநுமதி பெற்று அவற்றைப் பார்வையிட்டார். இதுவல்லவோ சிரத்தையென்பது!

இந்நூற்றுண்டில் ஈழநாட்டிலிருந்து தமிழ்நாட்டறிஞரும் சிரமேற் கொண்டு போற்றும் இரு நூற்பதிப்புக்கள் வெளி வந்துள்ளன. ஒன்று வித்துவ சிரோமணி கணேசையரின் தொல்காப்பிய உரைக் குறிப்புகள்; மற்றையது அருளம்பலவனாரின் பதிற்றுப்பத்து உரை.

பதிற்றுப்பத்து உரைமூலம் அருளம்பலவனாரின் புகழ் என்றும் நிலவும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புடையோரை மறக்க முடியுமா?

புலவர் செல்வி க. பூரணம் பீ. ஓ. எல்.
உதவி ஆசிரியை, ஈழநாடு, யாழ்ப்பாணம்,

ஐயா அருளம்பலவனாரை நினைக்கும் தோறும் அவரது தோற்றம கண்முன்னே வந்து நிற்கிறது. புன்சிரிப்புத் தவழும் முகம், அமைதியான தோற்றம், மென்மையான பேச்சு என்றுமே மறக்கமுடியுமா?

அவரை இறுதியாகச் சந்தித்த நான் பஸ்வண்டியில் யாழ்ப்பாணம் வரும் பொழுதாகும். சந்தித்தவுடன் சங்க நூற் செல்வர் திருவாசகத்தின் ஒருசொல்லிற்கு எந்த அர்த்தம் சரியாக இருக்குமென வினவினார். பண்டிதமணி அவர்களைச் சந்தித்துப் பழகிய நாட்கள் குறுகியனதான். அப்பொழுதெல்லாம் தமிழ் இலக்கியங்களில் அவர் தோய்ந்து தமது தமிழ் அறிவுக் கடலை ஆழமாகவும் அகலமாகவும் தோண்டி வருவதைக் கண்டேன். வானுலகு புகுவதற்கு முதல்நாளும் ஆஸ்பத்திரிப் படுக்கையில் இருந்துகொண்டு அச்சிலிருக்கும் தாம் வரைந்த திருவாசக ஆராய்ச்சியுரையினை மேற்பார்வை செய்த அவரின் தமிழார்வம் தானென்னே!

திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து ஆகிய இலக்கியங்களிற்கு அழகிய உரை வரைந்துள்ளார். அவர் வரைந்த திருவாசக ஆராய்ச்சியுரை அச்சிலிருக்கிறது. இவ் ஆராய்ச்சிகளுக்கு வேண்டிய நிழற்படங்கள், குறிப்புக்களைச் சேகரிக்க ஐயா சென்ற மார்கழித் திங்கள் தமிழகம் சென்று பல புனித தலங்களைத் தரிசித்தும் பல அறிஞர்களுடன் அளவளாவியும் வந்தார். 1962ம் ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற பதிற்றுப்பத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் பாடப்புத்தகமாக இடம் பெற்றுள்ளது.

செந்தமிழிற்கும் சிவநெறிக்கும் அளப்பரும் தொண்டாற்றிப் பிறந்தபொன்னாட்டிற்குப் பெரும் புகழ் தேடித்தந்து அந்நாட்டில் பிறந்த நம்மையும் உயர்த்திடும் சங்கநூற் செல்வர் பணியினை நாமும் பின்பற்றி அவரது ஆன்மா சாந்தியடைய வழி செய்வோம்.

---

# A Big Loss

A. Maheswaranathan Esq.,
" Siva Siva ", Karainagar.

*Dear Sir,*

It is with deepest sympathy that I learnt about the passing away of your beloved father Panditamani S. Arulampalam from your letter received in this office today.

Panditamani was a great Tamil Scholar who rendered a distinguished service to the Tamil literature by his scholarly editions of Tamil Classics among which is the Padittup Pattu which was awarded a prize by the Mandalaya in 1962. His demise is a big loss to the Tamil literary activities in Ceylon.

Please convey the deepest condolences of the Sri Lanka Sahitya Mandalaya to the members of Panditamani's family.

(Sgd.) K. G. Amaradasa
General Secretary,
Sri Lanka Sahitya Mandalaya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கநூற் செல்வர், பண்டிதமணி சு. அருளம்பலவனருக்கு அஞ்சலி.

கே. பி. ஹரன் ஆசிரியர்: ஈழநாடு, யாழ்ப்பாணம்

என் வாழ்க்கையிலே அருளம்பலவனரை என்றும் மறக்கமுடியாது. மேலான முறையில் அவர் பதிப்பித்த சங்க நூலாகிய பதிற்றுப்பத்துக்கு ஈழத்து அரசாங்கம் பரிசு வழங்கியதும், காரைநகர் மக்கள் தங்கள் தவப்புதல்வரவர்களுக்குப் பெரு விழா எடுத்தனர். அந்த விழாக் காட்சிகளையும், அவருக்குப் பொன்னடை போர்த்தும் பெரும் கௌரவம் எனக்குக் கிடைத்ததையும் எப்படி என்னல் மறக்க முடியும்?

அப்பெரியார் அழகாகப் பதிப்பித்துள்ள அச்சங்க நூல்களைப் பார்க்கையில் அவரது அன்பும், அறிவும், புன்சிரிப்பு மலரும் முகமும் என் கண்முன்னே காட்சியளிக்கின்றது. அண்மையில் தமிழகத்துக்கு சென்றிருக்கையில், அந்நூலை அங்குள்ள தமிழ்ப்புலவர்கள் போற்றி அதில் ஒரு பிரதி கிடைக்குமா என்று ஆவலுடன் கேட்டனர். அவரது புகழ் ஈழத்தைக் கடந்து தமிழ் கூறும் நல்லுலகனைத்தும் பரவியுள்ளளவு உரை சிறப்பாகமுடிந்தது.

கடைசி முறையாக அப்பெரியாரைக் கண்டபோது திருவாசகத்துக்கு உரை எழுதி வருவதாகக் கூறினர்கள். மாணிக்க வாசகரின் அடிச்சுவட்டில் சென்று பல திருத்தலங்களின் படங்களையும் எடுத்துள்ளதாகவும் அந்தப் புனிதப்பணியை அநேகமாகப்பூர்த்திசெய்து விட்டதாகவும் அறிய பெருமகிழ்ச்சி. அதை அழகான நூலாக விரைவில் வெளியிட வேண்டும். அதுவே அவரது ஆன்மாவுக்குப் பெரும் சாந்தியை அளிக்கும்

தமிழும் சைவமும் உள்ளவரை அப்பெரியாரின் புகழும் தொண்டும் வாழும். வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரப் பெருமானின் இன்னருளால் காரைப் பெருமக்கள் இப்பணியையும் நிறைவேற்றி புகழுடனே வாழும் தங்கள் தவப்புதல்வரின் ஆத்மா சாந்தி அடையவும், சைவத் தமிழுலகம் உய்யவும் செய்வாரென்ற நம்பிக்கையுடனே என் அஞ்சலியை அப்பெரியாருக்கு சமர்ப்பிக்கின்றேன்.

## நன்றி —

வித்துவான் மு. சபாரத்தினம்,
செயலாளர், தமிழ்வளர்ச்சிக்கழகம், காரைநகர்.

அமரர் பண்டிதமணி அருளம்பலவனரின் அரும்பெருஞ் சாதனைகளான ஆராய்ச்சியுரைகள் என்றும் நின்று நிலவும்போது 'நினைவுமலர்' என்பது தேவையற்றதொன்ருகும். ஆயினும் மரபினையொட்டி 31ம் நாளில் வெளியிடவேண்டும் என்பதற்காக மிகக் குறுகிய காலத்தில் எழுதியுதவிய பேரறிஞர்களின் கட்டுரை கவிதை, அனுதாபச் செய்திகளுடன், பண்டிதமணியின் வரலாற்றினையும் தலைமையுரையினையும் சேர்த்து நினைவுமலர் உருவாக்கப் பட்டுள்ளது. விடயங்களை உதவிய பேரறிஞர்களுக்கும், மற்றும் பலவித உதவிகள் புரிந்த அன்பர்களுக்கும் உளமார்ந்த நன்றியை உரிமைப்படுத்துகின்றேன்.

Donated by:-
PROF. K. KAILASAPATHY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக் கொண்டல்

சந்தக்கவிமணி சி. சின்னையாப்புலவர் அவர்கள், கச்சாயூர்.

கட்டளைக் கலித்துறை.

ஆண்டு பராபவ திங்கள்வை காசியி லாறொடொன்று
வேண்டிய தேதி புகர்வார மாமதி வெய்யவனைப்
பூண்டுறை கின்ற திதியார ஞளிற் புகழ்புவிமேல்
நீண்ட "அருளம் பலவன்" பரத்தி னிறைந்தனனே.

அறுசீர் விருத்தம்

"பண்டித மணிமுற் "சங்கப்
பனுவலின் செல்வ ரென்றிம்
மண்டலம் மதிக்கும் பட்டம்
மருவிய அறிஞன் கல்விக்
கொண்டலென் றுரைக்குஞ் சீர்த்தி
கொண்டசா கித்ய மென்ற
மண்டலப் பரிசு பெற்றேன்
வளர்பதிற் றுப்பத் தென்ற.

சங்கநூ லாய்ந்து மேலாந்
தகுமுரை தந்தோன் தெய்வத்
துங்கவா சகங்க ளுக்கோர்
தூயநல் லுரையுஞ் செய்தோன்
இங்கிதச் சேறு முன்ன
மெம்மைவிட் டகன்று ரின்னேர்
தங்கிளை யாகு மெங்கள்
தவப்பய னிருந்த வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிட்டபுரம் கணேசையர் தமிழ்ச்சங்க ஆதரவில் நிகழ்ந்த இலக்கியவிழாவில்

# சங்கநூற் செல்வரின் தலைமைப் பேருரை.

தமிழ்மொழி மிகவும் பழமையானது. அது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. தமிழ்தோன்றிய காலம் இன்னது என்று வலியுறுத்திக் கூறுதல் அரிதாகும். ஆரியர்கள் இந்திய நாட்டுக்கு வருவதன் முன் வடக்கே இமயம் முதல் தெற்கே குமரி வரையில் வழங்கி வந்த மொழி தமிழேயாகும். ஆதலின் முதுமொழியாகிய தமிழ், அநாதியென்றும் வழங்கப்படலாயிற்று.

"சதுர்மறை ஆரியம் வருமுன்
சகமுழுவதும் நினதாயின்
முதுமொழி அநாதி யென
மொழிகுவதும் வியப்பாமோ"

எனப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை கூறியிருத்தல் சிந்திக்கத் தக்கது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நமது மொழி பிற தொன்மொழிகளைப் போல வழக்கு வீழ்ந்தொழியாது இன்னும் பேராற்றலுடன் சிறந்து விளங்குகின்றது.

## கடற்கோள்கள் :

பண்டைக்காலத்துத் தமிழ் வேந்தர் தமிழைப் பொன்னேபோற் போற்றி வந்தனர். சங்கம் நிறுவி அதில் புலவர் பலரைத் தமிழை ஆராயும்படி செய்து தமிழை வளர்த்து வந்தனர். அவர்களால் இயற்றப் பெற்ற முதல் இடைச் சங்க நூல்கள் கடல்கோள் முதலிய ஏதுக்களால் அழிந்தொழிந்தன. இறையனுர் களவியலுரை, சிலப்பதிகாரம் முதலியன பண்டைக்கடல் கோள்களைப் பற்றிக் கூறுகின்றன.

சங்க இலக்கியங்களாக நமக்கு இப்போது கிடைப்பன, கடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்ட பத்துப்பாட்டு, எட்டுத் தொகை என்னும் நூல்களேயாகும். இவையெல்லாம் சொன்னயம், பொருணயம் வாய்ந்து கற்போர்க்குக் கழி பேருவகை பயப்பனவாய் விளங்குகின்றன.

பண்டைத் தமிழ் வேந்தரின் வீரம், ஆட்சிமுறை, கொடைத்திறம், மக்களின் பண்பாடு முதலியவற்றை அறிவதற்குக் கருவியாய், தமிழ் மக்களின் அழியாப் பெருஞ் செல்வமாய் விளங்குவன சங்க இலக்கியங்களேயாகும்.

## தமிழ் வழக்கு:

பனிபடு நெடுவரையாகிய இமயத்துக்கும் குமரிக் கடலுக்கும் இடையே வழங்கியதமிழ்மொழி காலப்போக்கில் வடக்கே வேங்கடமலை முதல் தெற்கே குமரிக்கடல் வரை வழங்குவதாயிற்று. இவ் வெல்லைகளுக்குட்பட்ட தமிழ்நாடு, தமிழகம் என வழங்கப்பட்டது. 'வையக வரைப்பிற்றமிழகம் கேட்ப' எனப் புறநானூற்றில் வருதலுங் காண்க.

இத்தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடை வேந்தர் மூவரும் ஆட்சிபுரிந்து வந்தார்கள். இவர்களுக்குக் கீழ் வேளிர் எனப்படும் குறுநில மன்னர்களும் ஆட்சிபுரிந்து வந்தனர். இவர்களுள் ஆற்றல்மிக்க மன்னர்கள், தம்முடன் மாறுபட்டுப் பொருதற் கெழுந்த வேந்தர்களையும், வேளிர்களையும் வென்று தமிழகம் முழுவதையும் ஆட்சிபுரிந்து வந்தனர்.

## கடலுக்குக்கடல் ஆட்சி:

சேரமான் பெருஞ் சோற்றுதியஞ்சேரலாதன் என்னும் சேரமன்னன் மேல்கடல் முதல் கீழ்கடல் வரையிலுள்ள பெருநிலப் பகுதியை ஆட்சிபுரிந்தமை "நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்ந்தது நின்வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும், யாணர் வைப்பினன்னுட்டுப் பொருந" என்று புறநானூறு கூறுதலால் அறியலாம்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்னும் சேர வேந்தன், மேல்—கீழ் கடல்களுக்கு இடைப்பட்ட நாட்டை ஆண்டமையைப் பதிற்றுப்பத்து கூறுகின்றது. வடக்கே விந்தமலை முதல், தெற்கே குமரிக் கடல்வரையில் புகழ்பரந்துவிளங்கிய பகைவேந்தரை பெருஞ் சேரலிரும் பொறைவயின் முன்னோர்கள் பொருது வென்றமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் ''கடவுட் பெயரியகானமொடு கல் லுயர்ந்து தெண்கடல் வளை இயமலர்தலை யுலகத்துத் தம் பெயர் போகிய ஒன்னார் தேய... கொற் மெய்திய வுரவோர் மருக'' எனப் பதிற்றுப்பத்தில் வருதலால் அறிய லாம். நெடுஞ் சேரலாதான், கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் முதலிய வேந் தர்கள் இமயம் குமரி யென்னும் எல்லைக ளுக்கு இடைப்பட்ட நாட்டில் மேலாகக் கூறப்படும் அரசர்களை வென்ற செய்தி யைப் பதிற்றுப்பத்து கூறுகின்றது.

## அறநெறி ஆட்சி

பண்டைத் தமிழ் வேந்தர் அறநெறி அறிந்து ஆட்சி செய்தனர். அதனால் அவர் கள் திகிரி அறந்தெரி திகிரி எனப்பட்டது. நல்ல அரசியலுக்குத் தடையாகும் குற்றங் கள் தம்பால் நிகழாமற் கடிந்தனர்; அறந்தங்கும்படி செங்கோல் செலுத்தினர். '' அறந்துஞ்சும் செங்கோலையே '' என மாந்தரஞ்சேரலிரும் பொறையைப் புல வர் ஒருவர் கூறுதலும் இதனைத் தெளிவு படுத்தும். பசி, பிணி, பகை என்பன தம் நாட்டில் நிகழாது காத்தனர். மழை பரு வந் தப்பாமற் பெய்தது. நிலம் பலனைப் பொழிந்தாற் போல மிக விளைந்தது. குடி மக்கள் ஒருவரை யொருவர் நலியாமலும், பிறர் பொருளை விரும்பாமலும், நல்லறி வுடையவர்களாய், நோய், பசி, முதலிய வற்றால் நலியாது நெடுங்காலம் வாழ்ந் தார்கள். படைவீரர்கள் தம் போர்த் தொழிலை மறக்கும்படி நெடுங்காலம், போரின்றிச் சமாதானமாக ஆண்டுவந்த னர். நாட்டில் பகையின்மையின் ஒரு ஊரை விட்டு மற்றொரு ஊருக்குச் செல் லுதலாகிய பதிப்பெயர் தலைக்குடி மக்கள் அறியாதிருந்தனர்.

## ஈதல் இழிவு

பண்டைக்காலத் தமிழர் ஈயென இரத்தலை இழிவான தொன்றாகக் கருதி னர். ஈயேன் என்றலை அதனினும் இழி வாகக் கருதினர். கொள்ளெனக் கொடுத் தலை உயர்வாகக் கருதினர். முடியுடை வேந்தர்களும் குறுநில மன்னர்களும் பிற செல்வர்களும் கொடையிற் சிறந்து விளங் கினர். கொடுத்தலையே ஒரு கடமையாகக் கொண்டார்கள்.


இமயவரம்பன் நெடுஞ்சேரலாதான் என்பான் 'கொடைக்கடனமர்ந்த கோடா நெஞ்சினனாய்' விளங்கினான். தன்பால் வந்த இரவலர்களுக்கெல்லாம் வரையாது வழங்கினான். முன்பரிசில் பெற்றவர்களே பின்னர் வந்தாலும் அவர்களுக்கும் வரை யாது வழங்கினான். 'ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம், பன்னாட் பயின்று பலரோடு செலினும், தலைநாளன்ன விருப் பினன் மாதோ' எனப் புறநானூற்றில் வருதல் பன்னாள் பலரோடு சென் றோருக்கும் மிக்க விருப்பத்தோடு கொடுக் கும் தமிழ் வேந்தரின் கொடைச்சிறப் பைக் காட்டுவதாகும்.

பாரி என்னும் வள்ளல் கொடைத் திறமுடையவனாய் விளங்கினான். மாரியைப் போல வரையாது வழங்கினான். பாரியின் பின் செல்வக் கடுங்கோவழியாதன் என் னும் சேரவேந்தன் கொடைத் திறம் வாய்ந்து விளங்கினான். ஒரு சிறந்த கொடையாளிக்கு இருக்க வேண்டிய, கொடுத்த பொருளை எண்ணி வருந்தாமை கொடுக்கும் தோறும் மகிழாமை, கொடுக் குந்தோறும் மிகுதியாகக் கொடுத்தல் முத லிய குணங்கள் உடையவனாய் இவன் விளங்கினான். தம்மறுமைப் பயன் கரு தாது, இரந்தோர் வறுமை நோக்கியே கொடுத்தார்கள்.

மக்கள் வாணிகம், கைத்தொழில், வேளாண்மை முதலிய தொழில்களிற் சிறந்து விளங்கினார்கள். சிறந்த பண்பாடு டையவர்களாய் விளங்கினார்கள். அறன் கடைப்படா வாழ்க்கையையும் பிறன் கடைச் செலாச் செல்வத்தையும் சிறந் தனவாகக் கருதினர். வேற்று மொழி வழங்கும் நாடாகிய மொழிபெயர் தேயத் தும் சென்று பொருளீட்டி வந்தனர். இனைய பல வரலாறுகள் பழைய இலக் கியங்கள் மூலம் அறியப்படும்.

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற
விழாவின்போது, பண்டிதர் அருளம்பலவனார் அவர்களுக்கு
'பண்டிதமணி' என்ற பட்டம் வழங்கி, தங்கப்பதக்கமளித்து,
பாராட்டியபோது எடுக்கப்பெற்ற படம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணி சு. அருளம்பலவனூர்

**அருள். தியாகராசா**

(இலங்கை வானொலியின் தமிழ்ப் பேச்சுத் துறைத் தலைவர்)

ஈழமணித் திருநாட்டிலே, தொல்காப்பியம் முதலிய பண்டை இலக்கண நூல்களிலும், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை ஆகிய சங்க நூல்களிலும், தேவாரம், திருவாசகம் முதலிய சைவ நூல்களிலும், பெரும் புலமை பெற்றிருந்த பண்டிதமணியொருவரைத் தமிழ் கூறும் நல்லுலகம் இழந்து கையாறுற்றுக் கலங்குகின்றது.

பண்டிதமணி அருளம்பலவனூர் ஒரு தமிழாசிரியராகத் தமது வாழ்க்கையை ஆரம்பித்தார். தமக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தையும் விடுதலை நாட்களையும், தமிழ் நூல்களைத் துருவித் துருவி ஆராய்வதிலும், அவற்றிற் சிலவற்றிற்கு உரை எழுதுவதிலும் செலவழித்தார்.

"உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்"

என்ற திருவள்ளுவ நாயனூரின் அருள்வாக்கிற் கிணங்கப், பண்டிதமணி அவர்கள், ஈழநாட்டிலும், தமிழகத்திலும் உள்ள கற்றறிந்த பெரியார்களையும், புலவர்களையும், பேராசிரியர்களையும் கண்டு மகிழ்ந்து உரையாடி இன்புறுவார்கள். இளம்பூரணர், சேனுவரையர், பேராசிரியர், நச்சினூர்க்கினியர், பரிமேலழகர், சிவஞானமுனிவர் முதலிய உரையாசிரியர்கள் தொல்காப்பியம், பத்துப் பாட்டு, திருக்குறள் முதலிய நூல்களுக்கு எழுதிய உரைவளங்களையெல்லாம் நன்ருகக் கற்றுத் தெளிந்தவர். பண்டிதமணியவர்கள், தமது இளமைக் காலத்திலேயே, திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரையையும், பெரும்பாணுற்றுப்படை ஆராய்ச்சியுரையையும் எழுதித் தமிழுலகிற்கு உபகரித்தார்கள். ஆயினும் இவர், சங்க நூல்களில் ஒன்ருகிய 'பதிற்றுப்பத்து' என்ற நூலுக்கு எழுதிய ஆராய்ச்சியுரையே இவரின் புகழை என்றும் நிலைநிறுத்த வல்லது. சொற்செறிவும், கருத்தாழமும், பொருட் பொலிவும், சேரமன்னர் எண்மருடைய வீரம், வெற்றி, மரபு, மாண்பு, கொடை முதலியவற்றை ஒருசேர அறிந்து கொள்வதற்குப் பதிற்றுப்பத்து பெருந் துணையாய் உள்ளது. இப்பதிற்றுப்பத்திற்குச் சுருக்கமான பழைய குறிப்புரை ஒன்றுண்டு. ஆனல், பண்டிதமணியவர்கள் எழுதிய ஆராய்ச்சியுரையோ, பழையவுரை, ஒப்புமைப் பகுதி, சொல்லாராய்ச்சி, பொருளாராய்ச்சி, மேற்கோள் முதலியவற்றைக் கொண்டு நனி விளங்குகின்றது.

பண்டிதமணி அவர்கள் பல ஆராய்ச்சிப் பேச்சுகளை இலங்கை வானொலி மூலம் ஒலிபரப்பியிருக்கின்ருர்கள். அதனல் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பண்டிதமணியின் வானொலிப் பேச்சுக்கள், அவருக்கிருந்த பழுத்த தமிழ்ப் புலமையையும் ஆராய்ச்சித் திறனையும் புலப்படுத்தின. பண்டிதமணியின் பேச்சை வானொலி மூலம் கேட்ட பேரறிஞர்கள், இலங்கை வானொலியையும், பண்டிதமணியையும் ஒருங்கே பாராட்டினூர்கள்.

பண்டிதமணி அருளம்பலவனூர் ஒரு நல்ல ஒழுக்க சீலராய் விளங்கினூர். தன்னுடைய வாழ்நாளையும், வருவாயையும் கல்விக்கே அர்ப்பணித்தார். திருவருணைக் கலம்பகத்தை இயற்றிய சைவ எல்லப்ப நாவலருக்கு அறிவுடைய, புலமை சான்ற மனைவி உறுதுணையாய் இருந்து உதவியது போலப் பண்டிதமணி அவர்கள் எழுதிய ஆராய்ச்சி நூல்களுக்கெல்லாம் அவருடைய வாழ்க்கைத் துணைவியார் உதவி செய்து கொண்டே வந்தார்கள். இது அவர் செய்த தவப்பயனே.

கல்விக் கடன் பூண்ட பண்டிதமணி அவர்களின் உள்ளமானது இலக்கிய இலக்கண ஆராய்ச்சியுடன் அமைதி பெறவில்லை, சமயத்துறையிலும் சென்றது. சென்ற சில காலமாக அவர் திருவாசகம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப் பனுவலுக்குப் புத்துரை காணும் நோக்கத்துடன், பல திருவாசகவுரைப் பிரதிகளைக் கருத்தூன்றி ஆராய்ந்தார்கள். தமது குடும்பத்துடன், மணிவாசகப்பெருமான் குருவருள் பெற்ற திருப்பெருந்துறை, தில்லைப்பதி, மதுரை, திருவாரூர் முதலிய சிவ ஸ்தலங்களையெல்லாம் தரிசித்தார்கள். அங்கே வேண்டிய குறிப்புக்களையெல்லாம் எடுத்து வந்தார்கள். அந்தோ! அவர் தமது கருத்து முற்றுப் பெறுவதற்கு முன்பாகவே விண்ணுலகெய்திவிட்டார்கள். இக்கருத்தை அவருடைய உற்றூர்களும், உறவினர்களும், நண்பர்களும் சேர்ந்து முடித்து வைப்பார்களென்றே நம்புகின்றேன்.

சிலவேளைகளில், 'உற்றுரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன்' என்று யான் நினைப்பதுண்டு. ஆனால், 'கற்றுரை யான் வேண்டேன், கற்பனவு மினியமையும்' என்ற எண்ணம் எனக்கு ஒருகாலுந் தோன்றியதில்லை. பண்டிதமணி அருளம்பலவனுருடன் யான் கலந்து உரையாடிய இன்ப நினைவு அலைகள் என் உள்ளத்தில் என்றும் பசுமையாகவே இருக்கும். என் இனிய நண்பர் அருளம்பலவனுரை நினைக்கும்போதெல்லாம்,

" அன்ன நெடுந் துவசனிவர்க் காயுண்
மிகக் கொடுத்திலனே யந்தோ! அந்தோ!"

என்ற எண்ணம் என்னை மேன்மேலும் உறுத்திக்கொண்டேயிருக்கும். அவரின் ஆன்மா இறைவன் திருவடியிற் சாந்தியடைவதாக.

~~~~~~

# கவி யோகி மகரிஷி சுத்தானந்த பாரதி
# பாராட்டு விழாவிற்கு அனுப்பிய செய்தி

செந்தமிழ் விரும்பும் செவ்வியர் வாழ்க!

தமிழர் பண்பாட்டைப் படம் பிடித்துக் காட்டுவன சங்கநூல்களே. அவற்றுள் எட்டுத்தொகை தமிழரின் வீரத் திருவையும், பொதுநலப் பணியையும், காதற் சிறப்பையும், கற்பின் எழிலையும், அரசர் மாண்பையும், அறஞ்செய் வண்மையையும் இயலோவியமாகக் காட்டும் இணையற்ற இலக்கியத் தொகுப்பாகும். இத்தொகுப்பில் பதிற்றுப்பத்து சேரமன்னர் வீரத்தையும் போர்த் திறனையும், தமிழரின் வண்மை உண்மை திண்மை செம்பைப் பண்புகளையும் விளக்கும் அரிய பாடலாகும். பத்தில், முதல் இரண்டும் கிடைத்தில. மீதி எட்டில் கண்ணர், கபிலர், கோதமர், பரணர், காக்கைபாடினியார், அரிசிற்கிழார். காப்பியனுர், பெருங் குன்றூர்க்கிழார் ஆதிய பெரும் புலவர் கருத்துக்களைக் கண்டு இன்புறுகிறோம்.

இந்த அரிய சங்கநூலுக்குப் பழைய உரைகள் உண்டு; எனினும் காலத்திற்கேற்ற உரை வகுத்த அருளம்பலப் புலவரின் அறிவுப் பணி தமிழுலகம் போற்றத்தக்கதாகும். இவ்வுரை நயத்தைப் பாராட்டும் புலவர்மணிகளுக்கு நன்றி. தமிழ்—சைவம் என்றால் ஸ்ரீ நாவலரின் யாழ்ப்பாணத்தையே என்னுள்ளம் நினைக்கிறது.

நாவலர் ஏற்றிய விளக்குச் சுடர்விட்டொளிர்க! எந்தாய் வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~~~

காரைநகரில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பாடப்பெற்ற

# பாராட்டுக் கவிகள்

894.81(D)92
VEN
AR/AR

(புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, குருக்கள் மடம்)

(அறுசீர் விருத்தம்)

1. சேரமன்னர் பதின்மர்புகழ் பப்பத்தாற் செய்பதிற்றுப் பத்திற் சேரர்
வீரமருள் கொடை படையின் வீறுண்மை ஆட்சிமுறை மேன்மைப் பண்பு
சேரநன்னாட் டியற்கையெழில் வாழ்க்கைமுறை தெளிந்தெவரும் நன்கு கற்றுத்
தேரவுரை தெரித்தருளம் பலப்புலவோய்! செயற்கரிய செய்தாய் நீயே.

2. உச்சிமேற் கொண்டுந்தன் உரைநுட்பம் பாராட்டி உவந்து வாழ்த்த
நச்சினார்க் கினியரிலை நயஞ்சுவைக்க நற்பேராசிரியர் இல்லை
மெச்சியுனை வியப்பதற்கு வித்வசிரோ மணிபொன்னம் பலமிங் கில்லை
இச்சையினால் இசைக்குமெந்தன் பாராட்டும் அன்பளவே இதன் மேலில்லை.

3. தொல்காப்பி யக்கடலிற் றுதைந்தாடி மறைபொருள்கள் தோற்று வித்தே
ஒல்காப்பே ரிலக்கணத்துக் கொருவனெனக் கணேசையன் உயர்ந்தான் நீயும்
தொல்காப்பி யங்களுளே தொன்மைபெறு பதிற்றுப்பத் துரையைத் தோற்றிப்
பல்காப்பி யப்பயனுக் கொருவனெனப் பாராட்டும் பரிசும் பெற்றாய்.

4. நாவலர்செந் தமிழ்வசன நடையினா லிசைபெற்றார் யாழ்நூ லீந்தே
பூவுலகிற் சுவாமிவிபு லானந்தர் புகழ்படைத்தார் பொலியும் சங்கப்
பாவுலகிற் பதிற்றுப்பத் துரைகண்டே சீரருளம் பலவா நீயும்
பூவுலவு நாமகளின் புதல்வனெனும் உரிமைபெறு தகுதி பூண்டாய்.

5. பரிசுக்கே நூலெழுதப் பகைபோட்டி பொறாமையெனும் படைகளோடு
வரிசைக்கே யோடுகின்ற மாக்கள்குழு மாண்பிறந்த மான மென்னும்
துரிசுக்கல் கொன்னடறிஞர் சிந்தைதனைத் துளைக்கின்ற சூழல் நாப்பண்
தரிசித்துன் பாராட்டில் மானசமாய் நின்றுகவி சாற்ற லுற்றேன்.

## வாழ்த்துச் செய்யுள்

வாழியரு ளம்பலவன் வாழி தமிழ்மரபு
வாழி தமிழ்ப்பண்பு வையமெலாம் — வாழியே
நல்லாசிரியர் பரம்பரையோர் நன்கினிதாய்
எல்லா நலமு மிசைந்து.

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுடைய மனிதர்

வித்துவான் பொன். முத்துக்குமாரன்

மனிதன் மிருகத்தைவிடச் சிறந்தவன். எங்ஙனம்? மனிதன் சிரித்து மகிழ வல்லவன்; மிருகம் சிரித்து மகிழும் இயல்பு இல்லாதது. ஆகவே, மனிதன் சிறந்தவன் என்பர் சிலர். மனிதன் மானத்தைக் காக்க ஆடை அணிபவன்; மிருகம் மானத்தைக் காத்தலையே அறியாதது. எனவே, மனிதன் மிருகத்தைவிட மாண்புடையவன் என்பர் மற்றொரு சாரார். தொல்காப்பியர் வேறொரு காரணம் கூறுவர். மனிதன் பகுத்தறிதலாகிய ஆறாவது அறிவும் உடையவன். மிருகம் ஐம்பொறிகளாலும் அறியும் ஐந்தறிவு மாத்திரமே உடையது. ஆகவே, மிருகத்தை விட மனிதனே மேலானவன் என்பர் அவர்.

அவ்வாறு மனிதனை மற்றைய உயிரினங்களிலிருந்து வேறுபடுத்தி மேம்படுத்துவதாய அறிவு ஒருவனிடத்தில் உள்ளது என்பதற்கு அறிகுறி யாது? ஒருவன் பல நூல்களையும் கற்று வல்லவனாதலோ, அளவில்லாத செல்வத்தைத் தேடவல்ல ஆற்றல் உடையவனாதலோ எனின் அவை அல்ல. அவையெல்லாம் அறிவுடைமையால் ஆகுமாயினும், அறிவுடைமைக்குப் பயன் அவை அல்ல. அங்ஙனமாயின், ஏனைய உயிர்கள் செய்யமுடியாத அரிய செயல்களைச் செய்வது அறிவின் பயன் தானே எனின் அதுவுமன்று. அற்ப அறிவுடைய தூக்கணாங் குருவி அற்புதமான கூட்டைக் கட்டுகிறதே! சிறிய உயிராகிய தேனீ சித்திரமாகத் தன் தேன் கூட்டைக் கட்டுகிறதே! அவற்றை நோக்க ஆறறிவு படைத்த மனிதன் செய்கையெல்லாம் எம்மாத்திரம்! ஆகவே, மனிதனிடத்திலேயே தனித்து விளங்கும் அவ்வறிவுடைமைக்குப் பயன்தான் யாது? எனின், அதற்கு வள்ளுவரே விடை தந்தருளியுள்ளார்.

"அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய் போல் போற்றாக் கடை",

என்பது அவ்விடையமைந்த அருமைக் குறள்.

அறிவானது அன்போடும் அருளோடும் கலந்து தொழிற்படும் போதுதான் மனிதனின் மாட்சி புலனாகின்றது. அப்பொழுது தான் அவன் பிற உயிர்கள் செய்யாத பெருஞ்செயலைச் செய்ய வல்லவனாகின்றான். அறிவும் அன்பும் ஒருங்கு நிறைவெய்தப் பெற்றவர்கள் தம்மைப்பற்றிய நினைவு சிறிதுபொழுதாயினும் இன்றி, பிற உயிர்களைப் பற்றியே பெரிதும் சிந்தித்துச் செயலாற்றுகின்றார்கள். அவர்கள் தமது துன்பத்தைப் போக்குதலை மறந்து, பிறர் படும் துன்பத்தை நீக்கி இன்பம் ஆக்கவே இடையறாது பாடுபடுகின்றார்கள்.

பிறர்க்குவரும் துன்பங்களோ பலபல. அவற்றுள் எல்லாம் பெரியது அறியாமையால்வரும் துன்பம். அறியாமையாகிய துன்பத்தாற் பிறர்படும் அல்லலை அறிந்து அவர்மேல் இரக்கங்கொண்டு, அவர் பொருட்டாக, தாம் வாழும் நாள் முழுவதையும் அர்ப்பணித்த அறிஞர்பெருமக்கள் முன்னாளிலும் சிலர் தோன்றினர். இந்நாளிலும் சிலர் தோன்றியுள்ளனர். அப்பெருமக்கள் அருளிய நூல்கள் அறியாமையை அகற்றி மக்களை மக்களாக வாழ வழிகாட்டுகின்றன. பசித்தவனுக்குக் கொடுக்கும் ஒருவேளை உணவு அவனுக்கு மட்டுமே, அப்பொழுது மாத்திரமே, துன்பத்தைப் போக்கி இன்பத்தை ஆக்கும். அறிஞர்கள் அளித்த நூல்களோவெனில் ஒரு காலத்தில் ஒருவருக்கும் மட்டுமன்றி உலகில் எல்லார்க்கும், எக்காலத்தும் அறியாமைத் துன்பத்தைப் போக்கி அமர வாழ்வு காணத் துணைசெய்யும்.

ஒருவனை மனிதனென மதிக்கச் செய்வது அறிவு. அந்த அறிவிற்குப் பயன் பிறர் துன்பத்தைத் தன் துன்பமெனக் கருதிப் போக்கல். பிறர்படும் துன்பங்களில் பெரியது அறியாமைத் துன்பம். அறியாமைத் துன்பத்தை அகற்றுதற்கென்றே அறிவு நூல்களைச் செய்யும் அருளாளர் பலர் முன்னும் தோன்றினர், பின்னும் தோன்றியுள்ளனர். அந்த அருளாளரே நிறைவுடைய மனிதர். அருளம்பலவனாரும் அவ்வாறு நிறைவுடைய பெருமனிதருள் ஒருவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கநூற் செல்வர் பண்டிதர் அருளம்பலவனார்

குல. சபாநாதன்.

ஈழவளநாட்டிலே சங்கநூல்கள், கந்தபுராணம், பெரியபுராணம் ஆகியவற்றிற்குப் பாரதநாட்டுப் புலவர்களும் தலைவணங்கும் உரையாசிரியர் பரம்பரை வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை, பிள்ளைப் புலவர் மக. க. வேற்பிள்ளை, சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர், வித்துவசிரோமணி சி. கணேசையர் ஆதியோருடன் முடிவடைந்து விட்டது என்ற பழிமொழி ஈழத் தமிழனைக்கு ஏற்படாது காத்த கர்மவீரன் பண்டிதர் அருளம்பலவனார். இப்பேரறிஞர் இவ்வுல வாழ்வை நீத்து இறைவன் திருவடி நீழலை அடைந்த செய்தி கேட்டுத் திடுக்குற்றேன்.

ஈழநாட்டிலே பண்டிதர்களுக்குக் குறைவில்லை. பாடநூல்களுக்கு உரையெழுதும் பண்டிதர்களுக்கும் பஞ்சமில்லை. ஆனல், சங்கநூல்களிலே தமிழறிஞர்களுக்குப் பெருந்தொல்லையைக் கொடுத்து வந்த பதிற்றுப்பத்துக்கு உரை காண்பது எளிதான செயல் அன்று. பண்டிதர் அருளம்பலவனார் செயற்கருஞ் செயல் செய்வதற்கென்றே பிறந்தவர். திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய பத்துப்பாட்டு நூல்களுக்கு முதற்கண் விளக்கமான விரிவுரை கண்ட பண்டிதர் அவர்கள் பல ஆண்டுகளாக அயராது மேற்கொண்ட முயற்சியின் பயனாகப் பதிற்றுப் பத்துக்குச் சிறந்த ஆராய்ச்சியுரை எழுதிப் பேரறிஞர்களின் நன்மதிப்பைப் பெற்றார். பண்டிதர் அவர்களை யான் கல்விக்காரியாலயத்தில் கடமையாற்றிய காலந்தொடக்கம் நன்கு அறிவேன். அவர்களுடன் நெடுங்காலமாக நெருங்கிப் பழக நேர்ந்தது. கொழும்புக்கு வரும்போது எனது குடிசைக்கும் வரத்தவறுவதில்லை.

பண்டிதர் அவர்களுடைய மாசற்ற தூய்மையான நெஞ்சினை அவருடைய புன்முறுவலே நன்கெடுத்துக்காட்டி நிற்கும். பண்டிதர் அவர்கள் சிரிக்கும்போது அவர்களுடைய இருகன்னங்களிலும் விழும் சிறு குழியினைக் காணும்போதெல்லாம் எனது உள்ளம் இறும்பூதெய்தும். ஆழ்ந்தகன்ற கல்விக்கும் நுன்மான் நுழைபுலத்துக்கும் கற்றறிந்தடங்கிய சான்றோருக்கும் எடுத்துக் காட்டாக வாழ்க்கை நடத்தியவர், பண்டிதர் அருளம்பலவனார்.

திருவாசக உரையெழும்போது பழைய உரைகளையெல்லாம் படித்துக் குறிப்பெழுதிக்கொள்ளவேண்டும் என்ற பேரவாவினால், ஊன், உறக்கமின்றி, பல வீடுகளுக்கு அலைந்து திரிந்ததை யான் நன்கறிவேன்.

சாகித்தியமண்டலம் பண்டிதர் அவர்களுக்குப் பரிசு வழங்கியதன் காரணமாக அந்த மண்டலம் சிறப்புற்றதேயன்றி, பண்டிதர் அவர்களுக்கு எவ்வித பெருமையோ புகழோ ஏற்படவில்லை.

பண்டிதர் அவர்கள் மரணப்படுக்கையில் இருந்த போதிலும், திருவாசகவுரைச் சரவைத்தாள்களை ஒப்புநோக்குவதில் ஈடுபட்டிருந்தார் என்பதை நோக்குமிடத்து, இந்நூலுரை வெளிவருவதில் அவருக்கிருந்த ஆவலும் ஆர்வமும் நன்கு புலப்படும்.

இந்நூலுரையினை விரைவில் வெளியிட்டுத் தமிழர் யாவரும் விலை கொடுத்து வாங்கி ஆதரித்து, அதனைத் தமிழுலகில் நிலவச் செய்வதே பண்டிதர் அவர்களுக்கு யாம் செய்ய வேண்டிய கைம்மாருகும். அதுவே சிறந்த ஞாபகசின்னமுமாகும்.

பண்டிதர் அவர்களை இழந்து துயருறும் அவருடைய மனைவி மக்கள் சுற்றத்தவர்க்கு எனது துக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன் பண்டிதர் அவர்களுடைய ஆன்மா சாந்தியடையுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

இற்றைக்கு மூன்று மாசங்களுக்கு முன் ஒரு தினம் தமிழ் அறிஞரும் அடக்கமுடையவருமான திரு. சு. அருளம்பலவனார் அவர்களின் சந்திப்புக் கிடைத்தது. அவர்களை உப வித்தியாதிபதி அவர்கள் ஆறுமுகநாவலர் அவர்களின் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டிருந்தார்கள். இருவரும் அதுபற்றி யோசனை செய்தோம்.

வைத்தீசுவர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் அவர்களின் தூண்டுதலினாலும், எனது பெரிய வேண்டுதலினாலும், அருளம்பலவனார் அவர்கள் தமது உடல்நலக் குறைவையும் பொருள் செய்யாது மேற்படி பதவியை ஏற்பதற்கு உடன்பாடு தெரிவிக்க வேண்டியவரானார்கள். நான் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன். அருளம்பலவனார் அவர்கள் அந்தப் பதவியை 'ஏற்கின்றேன்' என்று சொல்லி வாய் மூடமுன்னமே பல்லி சடாரென்றது.

அப்பால் வார்த்தையெழாமல் நான் தயக்கமுற்றேன். அருளம்பலவனார் அவர்கள் வழக்கம்போலப் புன்முறுவல் பூத்த முகத்துடன் எழுந்தார்கள். மேலும் ஆலோசித்துச் செய்யுங்கள் என்று மிருதுவான குரலிற் கூறி வழியனுப்பினேன். இந்த இறுதிச் சந்திப்பு என் மனத்திரையினின்றும் என்றும் அகலாது. தெய்வ சங்கற்பத்தை யார் அறிவார்!

கடின கிரந்தமாகிய இரகுவமிசத்துக்கு உரை செய்து மறைந்தார்கள் மதிப்புக்குரிய கணேசையா அவர்கள். ஐயா அவர்களுக்குப் பின்பு கடினமான நூல்களுக்கு உரை செய்ய வல்லார் ஒருவர் நமது மத்தியில் வித்தியா விநோதராய் வீற்றிருக்கின்றார் என்ற ஓர் எண்ணம் என்பாற் குடியிருந்து வந்தது. அது அருளம்பலவனார் அவர்களுடன் முற்றுப்புள்ளி எய்தியது.

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு".

---

# அநுதாபச் செய்தி

## டாக்டர் மா. இராசமாணிக்கனார் M. A., M. O. L., L. T., PH. D.

சென்னைப் பல்கலைக் கழகம்.

பண்டிதமணி சு. அருளம்பலவனாரின் மறைவு கேட்டு மனம் வருந்துகிறது. அப்பெரியார் சிறந்த புலவர். உயர்ந்த உரையாளர், பாராட்டத்தக்க பண்புடையவர். அவரது மறைவு தமிழகத்திற்கு ஒரு பெரும் இழப்பாகும். பண்டிதமணியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த வருத்தம் உரியதாகுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுப் பெருநூலிலே ஓர் அத்தியாயம்

ந. சபாரத்தினம்
அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

பண்டித அருளம்பலவனர் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்துச் செல்வதற்கு ஒரு சிலமணி நேரத்திற்கு முன்புதான் நான், அவரை யாழ்ப்பாண அரசினர் வைத்திய சாலையிற் காணச் சென்றிருந்தேன். நிலையற்ற இவ்வுலக வாழ்வினின்றும் நிலையான அவ்வுலக யாத்திரையை அவர் மேற்கொண்டு விட்டார், என்பதை நான் அப்பொழுதே அறிந்து கொண்டேன். அந்நீண்ட நெடும் பிரயாணத்தில் குறுக்கிட்டு இடர்ப்படுத்தி விட்டேனே என்று கூட நான் அவ்வேளையில் எண்ணி அஞ்சினேன். ஆயினும், ஆவிசோரும் அந்த நிலையிலும் தமது சக்தியை ஒன்றுகூட்டி என்னை அடையாளம் கண்டுகொண்டு மிகத்தீனமான குரலிலே விடை பெற்றுக் கொண்டு — அப்படித்தான் கூறவேண்டியிருக்கிறது — அவர் மீண்டும் தமது யாத்திரையைத் தொடர்ந்தார். அந்தக் காட்சி என்றுமே என் நெஞ்சை விட்டகலாது.

சிறந்த தமிழறிஞராய்த் திகழ்ந்த பண்டித அருளம்பலவனரவர்கள் சங்க நூல்களை விளக்கக் குறிப்புக்களுடன் பதிப்பிக்கும் ஆசிரியருமாய் விளங்கினர்கள். அவரிடம் குடிகொண்டிருந்த எல்லையற்ற பொறுமையையும், ஆழ்ந்த புலமையையும் கண்ட எவரும் அவர்பால் ஈடுபடாமல் இருக்கமுடியாது. தமிழையே தம் பெருவாழ்வாய்க் கொண்டிருந்தவராகையால் அவர் வேறு பற்றுக்களற்றவராயிருந்தார். தமிழின்மீது கொண்டிருந்த பேரபிமானத்தின் காரணமாக அவருடைய உள்ளத்திலும் உலையாத உறுதியொன்று குடிகொண்டு விளங்கியது. அதனையும் அவர் வெளிக்காட்டிக் கொண்டதில்லை. அவருடைய அரும்பணியை நம்மவர்கள் ஊக்குவிக்கத் தவறியபோதும் அவர் இறுதிவரை தளராமல் அதனைத் திறம்பட ஆற்றியே வந்துள்ளார். இரவில் நெடுநேரமானுலும் அதிகாலையிலுங்கூடத் தமது ஏகாந்தப் படிப்பறையிலே அவர் அவ்வருந் தமிழ்ச் சுவடிகளுக்கு முன்னுல், மடிகாலிட்டு அமர்ந்திருந்து சிந்தனையில் மூழ்கியிருப்பதை அவரை நெருங்கிப் பழகியவர்கள் அறிந்திப்பர். பழந்தமிழ்மரபு தவருத சொல்லாட்சி, பொருளாட்சி என்பவற்றில் அவர் பெற்றிருந்த இணையற்ற பெரும் புலமை தமிழ்ப் பேரகராதி (லெக்சிக்கன்) ஒன்றை உருவாக்குவதிற் பயன்பட்டிருக்க வேண்டிய ஒன்ருகும். தமிழ் மக்களின் கைகளிலிருந்து வேகமாய் மறைந்து கொண்டிருந்த பழந்தமிழ்நூற் செல்வங்களைத் தேடி அவற்றின் தொன்மைச் சிறப்பினை உலகுக்களித்த ஒரு சில அறிஞருள் அருளம்பலவனரும் ஒருவராய்த் திகழ்ந்தார். சந்தர்ப்ப சூழ்நிலைகள் துணைசெய்யாதிருந்தபோதும் தாம் மேற்கொண்ட பணியைத் தமது புலமைத் திறத்தினுல் மகத்தான தொன்ருக விளங்கச் செய்துள்ளார்.

தமிழ்த்தாயின்மீது கொண்ட அளவிறந்த பக்தியோடு இத்தகைய அருந் தொண்டாற்றிவந்த பண்டிதரவர்கள் அதனை இடையிலே விட்டுவிட்டு மறைந்துபோன துக்கம் அளப்பரிய தொன்ருகும்.

17ஆம் நூற்ருண்டின் தொடக்கப் பகுதியில் வாழ்ந்த சென் போல் தேவாலய அத்தியட்சகரும், ஆங்கிலக் கவிஞருமான ஜோன் டொன் (John Donne) ஒருமுறை நிகழ்த்திய உபதேசத்தின் ஒரு பகுதியைத் தான் நாம் இந்த நேரத்தில் நினைவுகூர வேண்டியுள்ளது. தனி மனிதனுடைய வாழ்வு ஒவ்வொன்றையும் ஒவ்வோரத்தியாயமாகக் கொண்ட, மனிதவாழ்வுப் பெருநூலுக்கு இறைவனையே ஆசிரியனுக வைத்து, டொன் கூறிய உபதேசம் ஒன்று தான் சாலவும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.

"மனிதன் ஒருவன் இறக்கும்போது வாழ்வுப் பெருநூலிலிருந்து ஓர் அத்தியாயம் கிழிக்கப்பட்டுவிடுகிறது, எனக் கருத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாகாது. அதற்குப் பதிலாக அவ்வத்தியாயம் இன்னும் சிறந்த முறையிலே விளக்கப்படுகின்றது என்பதே பொருள். ஒவ்வோரத்தியாயத்தையும் இவ்வாறு விளக்குதற்கு இறைவன் பலபேரை நியமிக்கின்ருன். சில அத்தியாயங்கள் முதுமையால் விளக்கப்படுகின்றன; சில பிணியால் விளக்கம் பெறுகின்றன; மற்றும் சில போராலும்; வேறுசில, நீதித் தீர்ப்பாலும் தெளிவுபடுத்தப்படுகின்றன. ஆனுல், இத்தெளிவிலும், விளக்கத்திலுமெல்லாம் இறைவனின் கைவண்ணம் பதிந்துதான் இருக்கின்றது. சிதறிக் கிடக்கும் அத்தியாய ஏடுகளையெல்லாம் ஒன்றுதிரட்டி நூல்வடிவந்தந்து அவற்றை மீண்டும் அப்பொது நூலகத்திலே ஒருவர்க் கொருவர் படித்துணர்ந்து கொள்ள வைப்பதும், அவனது பெருங்கருணைத் திறமேயாகும்.''

பண்டித அருளம்பலவனுரைப் பிரிந்து வாடும் உற்ருர் உறவினர்களும், தமிழறிஞர்களும் அனைவருமே சிந்தித்துத் தேறுதலடைவதற்குச் சாலவும் பொருந்துவதான ஒரு நற்சிந்தனை இதுவேயாகும்.

அவருடைய ஆன்மா சாந்தியடைக.

# அநுதாபச் செய்தி

## சிவ. உ. சோமசேகரம்

**முன்னைநாள் உதவி வித்தியாதிபதி.**

பண்டிதமணி அருளம்பலவனுரின் மறைவு தமிழ் உலகத்திற்கே அளவிட முடியாத மாபெரும் நட்டமெனக் கருதுகிறேன். அவர் ஒரு சிறு அரசாங்க பாடசாலையிலிருந்தமையால் போலும் அவரின் பெருமையை நாடு வெகு காலமாக அறிந்திலது. அரிய பதிற்றுப்பத்து ஆராய்ச்சிநூல் வெளியானதும் அவருடைய ஆர்வமும், ஆழ்ந்த அறிவும், ஆராய்வுத்திறனும் தமிழ் உலகத்திற்கு வெளியாயது. அவருக்கு அளிக்கப்பட்ட ''சங்கநூற் செல்வர்'' என்னும் பட்டம் சாலப்பொருத்தமே.

சங்கநூற் பணி முடிந்ததும் இறைவனருளால் திருவாசக ஆராய்ச்சியில் இறங்கினுர். இப்பணி முடிவுறும் வரைக்கும் இப்பிறவி நிலைக்கவேண்டுமென்பதே அவரது சதா பிரார்த்தனை. ஆனுல் இறைவன் திருவுள்ளம் வேருக இருந்தது. இறுதிநோய் அவரைப் பீடித்து வருத்தும் பொழுதும் அவர் சிந்தனை மணிவாசகரின் திருவாசகத் தேனையே நாடியிருந்ததை யான் அறிவேன்.

ஒரு பண்டிதரில் காணவேண்டிய பண்புகள் பல இவரில் சிறப்பாக அமைந்திருப்பதைக் கண்டு யான் மகிழ்ந்தேன். அவரது பரம்பரை அவர் தொடங்கிய சிறந்த பணியை நிறைவேற்றுவது முக்கிய கடமையாகும். அவரது ஆன்மா சிவபதமடைந்து இன்புற்றிருக்கத் தில்லைக்கூத்தனைப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின்மயமான அருளம்பலப்பண்டிதர்

பொ. கிருஷ்ணபிள்ளை
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கழகம்

சில ஆண்டுகளுக்கு முன் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கழகம் வெளியிடும் கலாவதிக்கு அக்கழகத்தின் வரலாறு பற்றி என்னை எழுதுமாறு பணித்தனர் வெளியீட்டாளர். அங்கிருந்த ஆசிரியருள் (கோப்பாய்—பலாலி ஆசிரியர் பயிற்சிக் கழகத்தாருள்) அதிகம் பழையவன் என்ற முறையிலேயே அதன் சரிதம் எழுதுமாறு தமியேனைத் தூண்டினர். கணபதியை நினைந்து எழுத நினைத்தபோது அந்த மகா கணபதிக்குப் பதிலாகச் சைவநல்மாமணியாகிய பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் ஞாபகமே முன் நின்றது. பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த காலத்திலே 'அருணசலம்' என்ற பெயரை அடிக்கடி கூறுவார்கள் பண்டிதமணி அவர்கள்.

"அண்ணு மலைஎம் அண்ணு போற்றி
கண்ணு ரமுதக் கடலே போற்றி"

என்ற அடிகள் அப்போதெல்லாம் அகத்தெழும். அண்ணுமலைக் கடவுள் நமக்கு மிகவும் அண்ணியன். கண்ணுக்கு அமுதக் கடல் போலத் தோற்றி எமக்கு அருளும் பெம்மான் அல்லவா அவன்? மணிவாசகப்பெருமான் திருவெம்பாவையிலுமல்லவா அண்ணுமலையானைக் 'கண்ணு ரமுதமுமாய் நின்ருள் கழல்பாடி' என்று நாம் அவன் நற்ருளைத் தொழுதால் அவன் எம் அரிய கண்ணுக்கு அமுதவடிவாகக் காட்சி அளிப்பான் என்று அருளியிருக்கின்ருர். அந்த அண்ணுமலையில் அருணேசுவரனை அல்லவா பண்டிதமணி போற்றுகின்ருர் என நினைப்பேன். சில காலத்தின் பின்தான் அவர் மனத்துட் குடிகொண்டவர் யாவர் என்ற உண்மை வெளிவரலாயிற்று. ஸ்ரீ இராமகிருஷ்ணர், மகான் விவேகாநந்தர், சைவநல் நாவலர் ஆகியோரைப் பற்றிய கதைகள் இப்பெரியாருடன் மாலைநேரம் உலாவப் போகும்போது சம்பாஷணையில் இடம் பெறும். அப்படி மாலை உலாப் போகும் ஒருதினம் பண்டிதமாமணி அவர்கள் சைவமாணவர் தம் சொந்தக் காலில் நின்று தமது சொந்தக் கலாசாலையாகக் கோப்பாய் (இருபாலை) ஆசிரியர் கழகத்தை மதித்து நடக்கக் காரணராயிருந்தவரை ஒருவரும் நினைப்பதில்லையே என்று உளங் குழைந்தார். அதனைப் பற்றி அவர்கள் கூறிஞல் நாம் அப்பெரியாரை நினைப்போம்; அவரைப்பற்றி வருங்காலத்தவருக்குக் கூறுவோம் என யான் கூறினேன். பிறமதத்தவர்கள் நடாத்தும் பயிற்சிக் கல்லூரி ஒன்றில் ஒரு பெரியார் பயிற்சிக்குச் சென்ருரென்றும் சைவ மதத்தை விட்டுத் தம் மதத்தைத் தழுவுவோருக்கே அப் பயிற்சிக் கலாசாலை பொருத்தமாக இருந்தமையால் பயிற்சிப் பத்திரத்திலும் சைவமே தலை சிறந்ததாக மதித்தவராகையால் இப் பெரியார் பயிற்சிபெருமலே தம் மனச்சாட்சிக்கு வஞ்சகமிழைக்காது வெளியேறினர் என்றும் அப்பெரியாரே சேர். பொன்னம்பலம் அருணசலம் இராமநாதன் போன்ற பெரியோர்களைக் கண்டு சைவருக்கு ஒரு பயிற்சிக் கலாசாலை வேண்டுமெனக் கேட்டு வற்புறுத்தி அப்பெரியார்கள் தம்மாலாவதனைச் செய்யத் தூண்டியமையாலேயே இருபாலையிலே அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கழகம் தோற்றலாயிற்று என விளக்கினர் பண்டிதமணி. இறுதியிலேதான் அப்படி அரும்பாடுபட்ட சைவாபிமானி காரைநகர் அருணசல உபாத்தியாயரென்றும் தாம் அவர் பெயரையே அடிக்கடி கூறுவதாகவும் பண்டிதப் பெருமகனர் கூறியபின்னரே தம் பெயர் வெளிவராமலே அருந்தொண்டாற்றிய அருணசல மணியைப் பற்றி அறிந்து உளமுருகினேன் அடியேன். இன்றும் உளமுருகுகின்றேன்.

பின்னர் பண்டிதராகிக் கோப்பாயிலே இரு வருட ஆசிரியர் பயிற்சிபெற வந்தவருள் ஒருவரும் தம் பெயரை இலக்கிய உலகிலே நிறுவினவருமாகிய அருளம்பலவனைப்பற்றிய பேச்செழுந்தபோது, பண்டிதமணி அவர்கள் (அப்போது திரு. அருளம்பலம் பண்டிதர்ப் பட்டம் பெறவில்லை. பயிற்சிபெறும் ஆசிரிய மாணவராகவே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருந்தார்.) காரைநகர் அருணுசல உபாத்தியாயருடைய மிகநெருங்கின சுற்றத்தவர் அவர் என அடியேனுக்கு அறிவுறுத்தினர். அருளம்பலவனரைக் காணும் போதெல்லாம் அருணுசல உபாத்தியாயருடைய ஞாபகம் என் அகத்தெழும். என்னை அறியாமலே அருளம்பலவனரை என் மனமார மதித்துப்போற்றுதல் என் இயல்பு. பெரிய ஒரு சான்ருேருடைய இனத்தவராகத்தான் இருந்தளவில் அமைந்துவிடாது அருளம்பலவனர் படித்துப் பண்டிதப் பட்டமும் பெற்று, ஆராய்சித்திறனும் வாய்க்கப் பெற்றுப் ''பதிற்றுப்பத்து'' என்னும் நூலுக்கு உரையுமே கண்டார். சங்ககால இலக்கியங்களுள் படித்துப் பொருளறிய எவரும் இடர்ப்படும் இந்த நூலுக்கு விரிவுரை இல்லாக் குறையை நீக்கினர் அருளம்பலவனர். இவ்வுரைச் சிறப்பின் பெருமையால் எவரும் மதிக்கும் பெரும் பரிசும் பெற்ருர் இப்பெரும் படிப்பாளி. இவர் செய்த இச்சேவையால் இவர் பெரிய **உரை ஆசிரியர் வரிசையில் வைத்து** மதிக்கக்கூடிய உயர்தனி நிலையும் பெற்றுவிட்டார். பத்துப்பாட்டு ஆற்றுப்படை ஒன்றுக்கு அரிய பெரிய ஆராய்ச்சி உரையும் வரைந்துள்ளார் இப்பண்டிதர். படித்துத் தேறிய அளவில் அமைந்துவிடாது தம் திறனை எல்லாம் தமிழ்த்தாயின் சிறப்புக்குக் கொடுத்த இவரை, இவரது அரும் பெரும் தமிழ்த்தொண்டுகள் முற்றுப் பெருதிருக்கையிலே இழந்த நம்மைவிடப் பேரிழப்பாளர் வேறுயாருளர்?

ஆடம்பரமற்ற சர்வசாதாரண மனிதராகவே இவர் எப்பொழுதும் காட்சி தருவார். உயர்ந்த இலட்சியத்தோடுகூடிய எளிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர் இப்பெரியார். கற்ருேரைக் கண்டு காமுற்றுத் தமிழ்த்துறை ஆராய்ச்சியை வளம்படுத்தினர் இந்த அறிஞர். சைவத் திருவாளர் சிவசங்கர சுப்பிரமணிய தேசிகருடைய மாணுக்கராகத் தம்மை மதித்தவர் இந்த ஆராய்சிப் பண்டிதர். தேசிகரவர்களும் இவருக்குப் பெருமதிப்புக் கொடுத்து இவர் தம் ஆராய்ச்சித் திறனை எல்லாம் வளர்க்க வேண்டிய வேண்டியாங்குதவினர். திருவாசகத்திற்கும் ஆராய்ச்சி முறையிலே உரைகாண விழைந்து அந்த உயரிய துறையிலும் ஈடுபட்டிருந்தார் அருளம்பலவனர்.

புண்ணிய உலகத்திலே பெருங்கவிஞர் பேருரையாசிரியர்கள் மத்தியிலே, தமிழ்ச் சுவையிலே தம்மை மறந்து தமிழ் மயமாக இப்பேரறிஞர் திகழ்கின்ருர் இன்று. பிறவிப் பெரும்பயனை அடைந்த பண்டிதமணி அருளம்பலவனர் ஞாபகம் தண்டமிழுலகில் நன்றே நிலவுக.

---

இலங்கை வானெலியைச் சேர்ந்த

**நாவற்குழியூர் நடராசன்**

வெளியீட்டு விழாவில் எடுத்துரைத்தது

பொருள்நூறு கொண்டு பொதியத் தமிழ்செய்
அருநூல் பதிற்றுப்பத் தாய்ந்து — பெருநூல்
உரைசெய் யருளம் பலவனெனச் சேரு
வரையளவன் இங்குதித்தான் வந்து.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

ஆ. தியாகராசா M. A., M. Litt.
அதிபர், காரைநகர் இந்துக் கல்லூரி.

பொறை, தன்னடக்கம், ஆழ்ந்த அறிவு, ஆதியாம் நற்பண்புகள் உருவெடுத்தாற்போன்ற காட்சியே உயர்திரு. அருளம்பலவனார் அவர்களது தோற்றமாகும். அவர்கள் தம் அறிவின் மலர்ச்சியே அவரது பதிற்றுப்பத்து ஆராய்ச்சியாகும். அவ்வாராச்சியின் நுண்மான் பினைத் துருவி ஆராய்ந்து, இலங்கைச் சாகித்திய மண்டலம் கௌரவித்தமை சாலப் பொருத்தமானதேயாம். பண்டிதர் அவர்களின் ஆராய்ச்சி இலங்கையில் மாத்திரமல்லாது, தமிழ் நாட்டிலும் பெரிதும் மதிக்கப் பெற்றுள்ளது. அவரது தளரா ஊக்கமும், சமயப்பற்றும், மணிவாசகரது திருவாசகத்திற்கும் ஆராய்ச்சி உரைகாண ஊக்கியது. அதனினும் அவர் வெற்றி கண்டார் என்பது மிகையாகாது. ஆனால், திருவாசக ஆராய்ச்சி அச்சுவாகனம் ஏறும் சமயத்தில் அவர் அகால மரணம் எய்தியதினை என்னும் பொழுது கற்றோர் உள்ளம் துடியா நிற்கின்றது.

மதிப்புக்குரிய பண்டிதர் அவர்கள், காரைமாதேவிக்கு மாத்திரமன்றித் தமிழ் பேசும் நல்லுலக மனைத்திற்கும் ஓர் அணிகலமாக விளங்குகின்றார். அன்னாரது ஆன்மா சாந்தியடைவதாக !

## S. Margabhandu Sarma, M. A.,

Sumaithangi, India.

*To Maheswaranathan,*

I am very shocked to hear death of Panditha-many S. Arulampalam. I am sure that I have lost a friend on whom I can depend upon. He is a stalwart among tamil scholars and I feel that he continues to live with me through his books which relish reading. I pray that the lord may give you solace and comfort in your bereavement.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலஞ்சென்ற சங்கநூற் செல்வர்
# பண்டிதமணி சு. அருளம்பலவனார்

மு. கு. சுப்பிரமணியம்,
"தாயுமானவர் இல்லம்", காரைநகர்.

"கற்குநிலை கற்றுல் கருவி அவிழா தருளாய்
நிற்கு நிலை கற்பதுவே நீதம் பராபரமே"
— தாயுமானுர்.

வயிற்றை வளர்ப்பதற்காயும், மண் பெண் பொன்னை வணங்குவதற்காயும் கற்குங் கல்வியால் ஒருவருக்கும் இம்மை மறுமைப் பயன்கள் உண்டாகாவாம்.

மேல்நாட்டாரின் கல்வி முறையைக் கைக்கொண்டு கல்வியைச் சமய தருமத்தை அடிப்படையாய்க் கொண்டு கல்லாமையால் மனிதர் இந்நாட்டிலும் பிற நாடுகளிலும் பாவமென்றுல் ஏதும் பயமின்றிச் செய்யத் தயங்குகிறுர்களில்லை.

மனிதர் இந்திரியங்களையும், மனத்தையும் கட்டுப்படுத்தி அறவழியைக் கடைப்பிடித்துக் காட்டுந் திருவருளே கண்ணுகக் கொண்டு பூரணமடையாவிட்டால் இம் மானிட வாழ்க்கையால் உலகுக்குத் துன்பமுண்டாகுமே அன்றி எள்ளளவும் பேரின்பமும், பேராற்றலும், பேரன்பும், பேரறிவும் உண்டாகாவாம்.

"அறத்தினூஉங் காக்கமுமில்லை அதனை
மறத்தலி னூங் கில்லைக் கேடு".

"மனத்துக் கண் மாசிலனுகுதல் அனைத்தற
னுகுல நீர பிற."

இப்பொய்யுலக வாழ்க்கைப் புலைச்சேரி வாதனையைத் திருவருளை நாடித்தான் தீர்க்கமுடியும். "சிவசிவ என்கிலர் தீவினையாளர், சிவசிவ என்றிடத் தீவினை மாளும், சிவசிவ என்றிடத் தேவருமாவர், சிவ சிவ என்றிடச் சிவகதிதானே," என்று சிவத்தைப் பற்றி நிற்பவர் பண்டிதமணி உயர்திரு. சு. அருளம்பலவனுர் போன்ற ஒரு சிலரேயாவர்.

"இலர் பலராகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலாதவர்."

இவர் ஆசிரியர் பதவியுடன் திருப்திப் பட்டுக் கொள்ளாது, சங்க நூல்களையும் சைவ சித்தாந்த நூல்களையும் ஓதி உணர்ந்து இக்கலைவளத்தில் வளர்ந்த திருச்செல்வருமாவர்.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கித் தானம் தவம் தருமஞ் சந்தமுஞ் செய்த சீலமுடையவர்.

தானங்களிற் சிறந்த தானம் வித்தியா தானம். இதற்கு எடுத்துக்காட்டாகவும் சீரிய இலட்சணமாய் உள்ளன இவர்கள் யாத்த பதிற்றுப்பத்து உரையும், திருவாசக உரையுமாகும்.

"வீழ்நாள் படாமை நன்றுற்றின்
அஃதொருவன்
வாழ்நாள் வழி அடைக்குங்கல்."

இச்சீலரின் ஆன்மா பேரும், பெருவாழ்வையும் மறுமையிலும் பெற்று ஆன்ம சாந்தியை இவ்வெய்ய புவி பார்த்து விழித்திருந்த அல்லற இறைவனிடம் பெற்றும் பேரின்பத்தில் திழைக்க வேண்டுமென்று வாழ்த்திக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணி சு. அருளம்பலவனுர் அவர்களின்

## பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை பற்றிய,

# பேரறிஞர்களின் கருத்து.

### மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்

பதிற்றுப்பத்து என்னுஞ் சங்கநூலின் இரண்டாம் பத்திற்கு, காரைநகர், பண்டிதர் அருளம்பலமவர்கள் ஒரு ஆராய்ச்சியுரை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கிருர்கள். இப்பதிற்றுப்பத்திற்குப் பழையவுரை ஒன்றும் ஸ்ரீமாந் ஒளவை துரைசாமிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட புத்துரையொன்றும் உளவாயினும், பண்டிதர் அவர்கள் பல நூற் பிரமாணங்களோடு விரிவான ஆராய்ச்சியுரை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்ருர்கள். பல இடங்களில் அவர்களது உரை முன்னைய புத்துரையினும் சிறப்பாகவே காணப்படுகின்றது. ''நின் செல்வங் கேட்டொறும்'' ''மழகளிறரிஞி மிரேப்பும்'' ''எரூமுடி கெழீஇய அகலம்'' ''வெய்துற வறியா நந்திய வாழ்க்கை'' ''நல்லெழில் நெடும்புதவு'' முதலாய தொடர்களுக்கு எழுதிய உரைக் குறிப்புக்கள் நோக்கத் தக்கன.

### பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் M. A., B. L., M. O. L. அவர்கள்

“ஒரு கால் நூற்ருண்டு பதிற்றுப்பத்தில் ஈடுபட்டுப் பழகிய உள்ளத்தோடு இத்தகைய சிறந்த ஆராய்ச்சியுரையை அருளம்பலவனுர் அளித்துள்ளார். அவ்வுரை இந்நாளில் தமிழ் ஆராய்ச்சிக்கு விருந்தாகி இனித்து ஒளிவிடும் என்பதில் ஐயமில்லை''

### மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்

''நுண்மாண் நுழைபுலமும், சங்க இலக்கியங்களில் முறையான பயிற்சியும், பழையவுரையாசிரியர்கள்பால் பற்றும், புலவரைப் போற்றும் பண்பும், செருக்கற்ற சிந்தையுமுடைய அன்பர் காரைநகர் பண்டித அருளம்பலவனுர் அவர்கள், இத்தகைய ஆராய்ச்சியுரையைச் செந்தமிழ் உலகிற்கு அளித்துள்ளமை போற்றற்குரியதே.''

### பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்:

''இக் காலத்தில் பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை அமிர்தத்தின் அருமை
யறிந்து, ஆசி வழங்குவார் அரியராயினும் வானுலகவாசியாகிய டாக்டர். உ. வே.
சாமிநாதையர் அவர்கள் இதனைக் கேள்விப்பட்டுக் காமுற்றுக் கசிந்துருகிக் கண்
ணீர் வார 'ஆசி வழங்குவார்களென்றே நான் கருதுகின்றேன். இவ்வுரையின் அருமை
பெருமை சிரமம் முதலியவைகளை அறிந்து மதித்தற்குரியவர்கள் ஐயர் அவர்கள்.''

### டாக்டர், மு. வரதராசனுர், M. A.. M.O.L., Ph. D. அவர்கள்

''பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையினைப் படித்து உவந்தேன். உரையாசிரி
யர் அருளம்பலவனுரின், இலக்கியப் பயிற்சியும், ஆராய்வுத் திறனும் போற்றற்
குரியன. பண்டைய மரபினையும் காத்து முன்னைய உரையையும் போற்றித் தாம்
காணும் புதிய உரைப்பகுதிகளையும் இயைவுபடுத்தியுள்ளார். அடிக்குறிப்பாகவும்,
மேற்கோளாகவும் அவர் எடுத்துக்காட்டிய குறிப்புக்கள் எண்ணில. பொறுமை
மிக்க உழைப்புத் திறனும், நுண்ணிய ஆராய்ச்சி வன்மையும் போற்றற்குரியன.''

### அ. ச. ஞானசம்பந்தன் M. A. அவர்கள்

“அருளம்பலவனுர் மிகுந்த உழைப்பை மேற்கொண்டு இவ்வாராய்ச்சியுரை
யை உதவயுள்ளார். ஒவ்வொரு சொல்லுக்கும், சொற்ருெடருக்கும் அவர் தரு
கின்ற மேற்கோளாட்சி அவரது பரந்துபட்ட புலமையைக் காட்டுகிறது.''

### டாக்டர், மா. இராசமாணிக்கனுர் M. A., L. T., M. O. L. Ph. D. அவர்கள்

''பண்டிதர் அருளம்பலவனுர் பழைய உரையை அகபபடுத்தி இனிய நல்
லுரை ஒன்று வரைந்துள்ளார். இவ்வுரை பாடலும், கண்ணழிப்புரையும், மேற்
கோளும் அகலவுரையும் கொண்டு ஒளிர்கின்றது. இனிய செந்தமிழ் மொழி மறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ச்சி பெற்றுவரும் இக்காலத்தில் இந்நல்லுரை இன்றியமையாததொன்றாகும்: இவ்வுரையில் ஆசிரியரது நுண்மாண் நுழைபுலம் வெள்ளிடை விலங்கலெனத் தெரிகின்றது.''

**வித்துவான், செ. சிங்காரவேலனுர் B. A. அவர்கள்**

''தேர்ந்த புலமையும் அழுத்தமான இலக்கண அறிவும் வாய்ந்த தமிழ்ப் புரவலர் அருளம்பலவனுர் எழுதிய பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை, சங்கநூற்கல்வி குறைந்திருக்கும் இக்காலத்துக்கு ஓர் இனிய பேருகும். தமிழ்ப் புலவர்களுக்கும், தமிழாராய்ச்சி புரிவோருக்கும் இந்நூல் விருந்தாகும்.''

**பண்டித வித்துவான், கா. பொ. இரத்தினம் M. A, B. O. L, அவர்கள்**

''பண்டிதர் அருளம்பலவனுர் பழுத்த தமிழ்ப் புலமை கனிந்த பெரியார்: சங்கநூல்களைத் துருவித் துருவி ஆராய்ந்து தாம் பெற்ற பேரறிவினை, பிறருக்குப் பயன்படுத்தும் நோக்கத்துடன் அரும்பணியாற்றியவர். இத் தொண்டைச் செய்வதற்குப் பன்னுள் முயற்சியும், பரந்த ஆராய்ச்சியும், பெரும் பொறுமையும் இன்றியமையாதன. அருளம்பலவனுரது தொண்டு தமிழ்மொழி வாழும் காலம் முழுதும் நிலைத்து நிற்கும் தொண்டாகும். வருங்காலத்து அறிஞர்கள் நச்சினுர்க்கினியர், பரிமேலழகர் போன்ற பெரும் உரையாசிரியர்கள் வரிசையில் இவரை வைத்துப் பாராட்டுவார்கள்.''

**தமிழ்ப் பேராசிரியர், கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்கள்**

''பதிற்றுப்பத்து என்னும் தொகை நூலுக்கு சீரிய செம்மையுரை கண்டவர் பண்டிதர் அருளம்பலவனுர். சங்கச் சான்றேரின் உள்ளக்கிடக்கையைத் தெளிவாக வெளிப்படுத்துவதற்காகவும், தம் உண்மைப் பொருளைத் துணிந்துகொள்ளுவதற்காகவும் ஆசிரியர் எடுத்த முயற்சி பாராட்டுதற்குரியது. இந்நூல் ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படுமென்பதில் ஐயமில்லை.''

**ஈழநாடு ஆசிரியர், கே. பி. ஹரன், அவர்கள்**

''பதிற்றுப் பத்து என்ற நூலைப்பற்றி இதற்குமுன் நீங்கள் கேள்விப்பட்டதுண்டோ? சங்க இலக்கியமான இந்நூலை, ''இரும்புக் கடலை'' என்றுர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள். இந்த இரும்புக் கடலையைப் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே சுவைத்து, சுண்டலாக்கி எல்லோரும் சாப்பிடும்படி செய்ய உதவியுள்ளார் பண்டித அருளம்பலவனுர் அவர்கள்.''

UNIVERSITY OF JAFFNA

## வெளியீட்டு விழாச் செய்தி

**திரு. சு. நடேசபிள்ளை, B. A., B. L., F. R. H. S.**

பதிற்றுப்பத்துக்குப் பண்டிதர் சு. அருளம்பலவனுர் எழுதியுள்ள ஆராய்ச்சியுரை பலவகையிலும் பயன்படத்தக்கதாகும். இவ்வுரையின் முதற் பாகம் மூன்று ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்டுப் பல அறிஞர்களின் பாராட்டைப் பெற்றது. இப்பொழுது இவ்வுரையின் எஞ்சிய பாகம் வெளிவருகின்றது. சங்க இலக்கியங்களை இக்காலத்தில் முறையாக, ஐயந்திரிபறக் கற்க விரும்புவோர்க்கு இத்தகைய ஆராய்ச்சியுரைகள் பெரிதும் வேண்டற்பாலன. இவ்வாராய்ச்சியுரையை ஊன்றிப் படிப்பவர்கள் சங்க இலக்கியங்களை எளிதில் விளங்கிச் சுவைக்கக்கூடிய திறம் பெறுவார்கள் என்று உறுதியாகக் கூறலாம். இவ்வுரையாசிரியரது ஆழ்ந்த சங்கநூற் பயிற்சி போற்றற்குரியது. இவ்வுரையில் காட்டப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான மேற்கோள்கள் இவ்வாசிரியரின் பெரும் புலமைக்கும் நினைவாற்றலுக்கும் சான்று பகர்கின்றன. பல நுணுக்கமான ஆராய்ச்சிக் குறிப்புகள் இவ்வுரைக்குச் சிறப்பளிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

257968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna
257966
Library

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org